


புஷ்பாதங்க துரை



# "காபரே" இலவசம்

**1**

—புஷ்பா தங்கதுரை

போன் அடித்தது.

சிங் துப்பறியும் இன்ஸ்பெக்டர் (துளசிங்கம்) நிமிர்ந்தார்.

— ஸார் கமிஷனர்!

என்று லிங்க் துணை இன்ஸ்பெக்டர் (ராமலிங்கம்) அவசர குரல் கொடுத்தான்.

அடுத்த விநாடி ரிஸீவரை தூக்கினார்.

— மிஸ்டர் சிங்! மிஸ்டர் கல்யாண்னு ஒருத்தரை அனுப்பறேன்! மூரூர்லே பெரிய பண்ணை வைத்து நடத்தறார்.

— எஸ் ஸார்!

— மூரூர்லே பரமேஸ்வரர் கோயில் தெரியுமா?

— தெரியும் ஸார்.

— மூன்று வருஷம் முன்னாடி அங்கே ஒரு கொள்ளை நடந்திச்சு! 60 லட்சம் நகை போயிடுத்து...

— எஸ் ஸார்!

— நகை மதிப்பு வெறும் 60 லட்சம் இருக்கலாம்! 60 கோடியாகவும் இருக்கலாம்!

— ஆச்சரியமாக இருக்கே!

— பரமேஸ்வரர் கோயிலின் பழம் நகைகள் முழுதும் போச்சுன்னு செய்தியை வேணும்னு வெளியிடல்லை.

— எஸ் ஸார்!

— அது விஷயமா மிஸ்டர் கல்யாண் என்கிறவர் உங்களைப் பார்க்க வரார்! பேசுங்க! நீங்க இதிலே உதவி புரியணும்!

— எஸ் ஸார்!

கல்யாண் வந்தார்.

பருத்த சரீரம்! கைகளில் மோதிரங்கள் மின்னின; நெற்றியில் ஒரே விபூதி.

நாற்காலி காணாமல் அமர்ந்தார்.

– ஸார்! இந்தச் செய்தியை அப்போ வேணுமின்னு விடல்லை. காரணம் கோயில் நகை நம்ப நாட்டை விட்டுப் போயிடுமோன்னு பயந்தோம்! இப்ப அது விஷயமா வந்தேன்.

– சொல்லுங்க ஸார்!

– ஜோதிகா தெரியுமா?

– ஜோதிகா யார் அது? சினிமா ஆக்டரஸ்ஸா?

– இதோ பாருங்க!

நான்கு போட்டோக்களைப் பரப்பினார்.

சிங்கின் கண் 'டக்' என்று விரிந்தது.

காண்பது என்ன?

மின் வெட்டுச் சாயல் அந்தப் பெண்ணுக்கு.

இன்னும் கண் வெட்டு முகவெட்டு.

'மார்' வெட்டும் கூட!

சோளி அப்படி ஒரு 'கட்'டில் இருந்தது.

– ஜோதிகா! என்றார் கல்யாண்.

– நடிக்கிறாளா?

– சினிமாவிலே இல்லை, வாழ்க்கையிலே.

– ஓ! இவளுக்கும் நம்ம பிரச்சனைக்கும் என்ன சம்பந்தம்?

– இருக்கு சொல்றேன்! எங்க ஊர்க் கோயில் பிரசித்தி பெற்ற பரமேஸ்வரர் கோவில்.

– கேள்விப்பட்டிருக்கேன்.

– அந்தக் கோயிலுக்கு அடிக்கடி இவ பக்தியோடு வந்து சாமி கும்பிட்டா! வாரம் ஒரு வாட்டி வந்துடுவா! சுவாமிக்கு



அபிஷேகம், நைவேத்தியம் என்று நல்லா செலவழிப்பா!

– மெட்ராஸ்லேர்ந்து வருவாளா?

– ஆமாம் ஸார்! வாரா வாரம் கார்லே வருவா! அறுபது மைல் தானே?

– சரி!

– இப்படி வந்ததிலே தர்மகர்த்தா மகன் தருமுவை சொக்க வச்சுட்டா! அவனை அப்படியே வலைக்குள்ளே போட்டுக்கிட்டா.

– ஊர்லே விஷயம் தெரியுமா?

– தெரியாம என்ன? அவங்க குடும்பத்திலே ரகளை! தர்மகர்த்தா படுக்கையிலே விழுந்துட்டாரு.

– கஷ்டமே!

– ஒரு நாள் ராத்திரி திடீர்னு கார்லே ஒரு கோஷ்டி வந்தாங்க! கோயில்லே புகுந்து அத்தனை பழங்கால நகைகளையும் அள்ளிட்டுப் போயிட்டாங்க! பாண்டியர் கால நகை! பல்லவ கால நகை!

– ஓ!

– இந்தக் கொள்ளை பின்னாடி இந்த ஜோதிகா தான் இருந்தா! கிங் பின் இவ தான்.

– கண்டுபிடிச்சாச்சா?

– ஆமாம்! ஊர்லே ரெண்டு பேர் அன்னி ராத்திரி அவளை ஊருக்கு வெளியிலே இரண்டு மைல் தள்ளி ஒரு தோப்பில் மறைஞ்சு இருக்கறதைப் பார்த்துட்டாங்க. கொள்ளைக்காரங்க அவ உத்தரவு கேட்டு நடக்கிறதையும் பார்த்துட்டாங்க.

– அப்போ அவங்க சாட்சியம் ஆயிட்டாங்களா?

– ஆமாம்! இதிலே போலீஸ் தருமுவையும் இழுத்தாங்க அவன் கோர்ட்லே அப்ரூவரா மாறிட்டான்! ஜோதிகாவின் நயவஞ்சகம் தெரிஞ்சு போச்சு!

– கேஸ் எப்படி முடிஞ்சது?

– ஜோதிகாவுக்கு அஞ்சு வருஷம் ஸார்! உள்ளே இருக்கா?

– சரி! இப்ப என்னதான் பிரச்சனை?

– கோயில் நகைகள், கொஞ்சம் தான் கிடைச்சிருக்கு. பழைய கால நகைங்க எதுவும் வெளிவரல்லை. ஜோதிகா அதை எங்கேயோ புதைச்சு வச்சிருக்கா.

சிங் நெற்றியில் சுருக்கம் எழுந்தது.

– புதைச்ச இடத்தை அவள் சொல்லலே இல்லையா?

– இல்லை ஸார்! நீங்க தான் அவள்கிட்டே பக்குவமா கேட்டு..........

## 3

– அதோ போறாளே கடைசியா அவதான் ஜோதிகா! என்றார் ஜெயில் சூப்பிரன்டெண்டன்ட்.

சிங் பார்வையைத் தூக்கினார்.

ஜெயில் ஆபீஸ் இரண்டாம் மாடி சன்னலில் துணித் திரைக்குப் பின்னால் அவர்கள் இருந்தார்கள்.

கீழே மைதானத்தில் பெண் கைதிகள் வரிசையாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

வரிசைகளுக்கு சற்று பின்னே, தனது பெரிய சந்துகளை ஆட்டிக் கொண்டு வார்டன் பெண் நடந்து சென்றாள்.

ஜோதிகாவைக் கவனித்தார்.

அவள் போகும் ஸ்டைல் ரொம்ப நேர்த்தி.

நல்ல முகவெட்டு! கண் வெட்டும் கூட!

ஜெயிலின் தட்டையில் கூட 'மார்'வெட்டு நன்றாகத் தெரிந்தது.

– இவ எப்படி உள்ளே வாடாம வதங்காம இருக்கா?

சிங் கேட்டார்.

– தேவ ரகசியம் ஸார்! அவள் சொன்னா மற்ற எல்லாக் கைதிகளும் கேட்கிறாங்க. தவிர..........

சிங் நிமிர்ந்தார்.

– உள்ளே அவளுக்கு என்னென்ன ரகசியமா வருது? எப்படி வருதெல்லாம் ஆண்டவனுக்கு வெளிச்சம்.

– உங்களாலே கண்ட்ரோல் பண்ண முடியலையா?

– என் அதிகாரம் எதுவரை போகும்னு எனக்கே தெரியாது! உங்களுக்குத் தெரியுமே ஸார்! ஜெயில்லே இருக்கிற ஒவ்வொருத்தருமே கவர்ன்மெண்ட் விரோதி... அடைக்கிறதுக்கு ஒரு ஓட்டை இருந்தா அடைச்சுடலாம்! ஆயிரம் ஓட்டை இருந்திச்சுன்னா....

அநுபவ ரீதியில் அவர் சொல்வதை சிங் ஓரளவு உணர்ந்தார்.

– சரி! பி.ஆர்.ஓ. இருக்காரா?

– இருக்கார்! இதோ கூப்பிடறேன்!

ஒரு நிமிடத்தில் அவர் வந்தார்.

– நீங்க ஜோதிகாவை விசாரிச்சீங்களா?

சிங் பி.ஆர்.ஓவைப் பார்த்துக் கேட்டார்.

– விசாரிச்சேன் ஸார்! ரொம்ப பளைன்டா பொய் சொல்றா! கோயில் நகை பத்தி எதுவும் எனக்குத் தெரியாது. என்னை அனாவசியமா இந்த கேஸ்லே மாட்டி விட்டுட்டாங்க என்கிறா!

– அவ சொல்றதை நம்பறீங்களா?

– நிச்சயம் இல்லை ஸார்! ஆள் ரொம்ப ஆழம்! கண் அழகுகாரி! பார்வையிலேயே நம்ப வச்சுடுவா!

– நீங்க நம்பிட்டீங்க இல்லையா?

– சத்தியமா இல்லை ஸார்! ஆனால் இவளை டாக்கிள் பண்றது ரொம்ப கஷ்டம்.

சிங் யோசனையில் விழுந்தார்.

– ஸார், மிஸ்டர் சிங்! உங்களைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்! இருந்தும் ஒண்ணு சொல்லலாமா?

– தாராளமா சொல்லுங்க!

– ஜோதிகாகிட்டே விசாரணை மூலம் எதுவும் கறந்து விட முடியாது! அவகிட்டே மட்டும் பலிக்காது!

– அப்படியா சொல்றீங்க?

– நல்ல மூளை அவளுக்கு! ஒரு வார்த்தை நழுவ விட்டுட மாட்டா! எதைப் பிடிச்சுக்கலாம்னு பார்த்தா.......

– ஓ! அவ்வளவு கெட்டி?

– ஆமாம்! இன்னொன்றும் சொல்லிடறேன் ஸார். நான்

கண்டுபிடிச்சது தான்.

– என்ன?

– தர்ட் டிகிரி வெத்தாட் எதுவும் நடக்காது! கல்லுளி மங்கருன்னு எங்க பக்கத்திலே சொல்லுவாங்க. அவ அப்படிப்பட்டவ! என்றார் பி.ஆர்.ஒ!

– நீங்க ஏதாவது செஞ்சு பார்த்தீங்களா?

– லேசா அவள் புரிஞ்சுக்கிடாம, சாப்பாடு சரியாக் கொடுக்காம, டாய்லெட்டுக்குத் தண்ணி விடாம பல செஞ்சு பார்த்தாச்சு! நேராம் டிபார்ட்மெண்ட் பேரிலே ஐ.ஜி. ப்ரிஸன்ஸ் செஞ்சு பார்த்தாரு...... ஸார் எது செஞ்சாம் அவள் புன்னகை மாறணுமே? துளிச்சும் மாறல்லை! முகத்திலே சின்ன சுளிப்பு வரணுமே!..... எதுவும் கிடையாது.... ரொம்ப கடினமான பெண்.......

– பி.ஆர்.ஒ. ஸார்! நான் என்ன செய்யப் போறேன்னு எனக்கே தெரியாது! ஆனா உங்க அனுபவம் எனக்கு உதவும் என்று சிங் சொன்னார்.

அதே நேரம்...... ஆ! இந்தப் பெண் எனக்கு ஒரு சவால்!...... என்று நினைத்தார்.

– ஜோதிகா கிட்டேயிருந்து செய்தி ஏதாவது வெளியிலே போகுதா?

– தெரியாது ஸார்! இவளைச் சேர்ந்தவங்க பத்து வருஷம் தண்டனையில் உள்ளே இருக்காங்க! இதைத் தவிர, வெளியிலே சில ஆட்கள் இருக்கணும்..... அவங்களோடு தொடர்பு வந்துடுமோன்னு ஒரு பயம் இருக்கு!

சிங் யோசித்தார்.

– இங்கே நடத்தை எப்படி இருக்கு?

– ரொம்ப ஒழுங்கு! ரொம்ப கண்ணியம்!

– ஓகோ! அப்போ ஒரு வேலை செய்யலாம். அவளைப் பரோல்ல விடலாமே?

– அவ கேட்டுக்கிட்டுத்தான் இருக்கிறா. இவள் மாஜி காதலன் தருமு அப்ரூவரா மாறிட்டான்! இவ வெளியிலே போனா, அவனுக்குத் தீங்கு வரும்னு நினைச்சோம்! இப்போ தருமு செத்துப் போயிட்டான் நோயிலே! இனிமே அனுப்பலாம்.



ஆனா.... எச்சரிக்கை வேணும்.

– நான் பார்த்துக்கறேன்! இதை ரூல் பண்ணுங்க. நான் மேலிடத்தில் சொல்றேன்.

மியூசிக் டீச்சர் வனிதா அந்த வீட்டின் சொந்தக்காரி.

கீழே தன் இரண்டு பெண்களுடன் குடி இருந்தாள்.

மாடியில் மியூசிக் வகுப்பு நடத்தி வந்தாள்.

அன்று காலை பத்து மணிக்கு ஜீப் ஒன்று அவள் வீட்டு வாசலில் வந்து நின்றது.

ஒரு சப்–இன்ஸ்பெக்டரும் ஒரு பாண்ட் ஷர்ட் மனிதரும் வீட்டை நோக்கி வந்தார்கள்.

ஹாலிலிருந்த வனிதா சற்று கலவரத்துடன் பார்த்தாள்.

– மேடம் வாங்களா? என்று இன்ஸ்பெக்டர் மரியாதையுடன் கேட்டதுடன் கொஞ்சம் விசுவாசம் வந்தது.

நாற்காலிகளைப் போட்டாள்.

– நான் இந்த வட்டார இன்ஸ்பெக்டர் இவர் சி.ஐ.டி. துறை சேர்ந்த சிங்!

– வணக்கங்க! நான் என்ன செய்யணும்?

– ஒரு முக்கிய கேஸ் விஷயமா, உங்க மாடி தேவைப்படறது! அதுக்கான வாடகை ஏதுவோ கொடுக்க முடியும்! இது சர்க்காரின் முக்கிய கேஸ்.

– மாடியிலேயா?

– எப்போதும் ஒருத்தரோ, இரண்டு பேரோ நின்னு தெருவை வாட்ச் பண்ணுவாங்க.

– ஸார்! மாடியிலே மியூசிக் கிளாஸ் நடத்தறோமே!

– அதுதான் எங்களுக்கு வேணும்! கிளாஸ் அங்கேயே நடக்கலாம்!

– அப்போ எப்படி இருப்பீங்க?

– வர்றவங்க யாருன்னு காட்டிக் கொடுக்கறோம்! அவங்க பைனாகுலர்ஸ் வச்சு, வாசலை செக் பண்ணுவாங்க. உங்களுக்கு ஒண்ணும் தொந்தரவு கொடுக்க மாட்டாங்க!

நாங்க …!

வனிதா யோசித்தாள்.

– ஒன்னும் யோசிக்காதீங்க! இரண்டு மாசத்துக்குள்ளே எல்லாம் முடிஞ்சுடும்! இதிலே வெற்றி நிச்சயம். அந்த சமயத்திலே எங்க டிபார்ட்மெண்டு அவார்ட் கிடைக்கும் உங்க ஒத்துழைப்புக்கு.....

– அதெல்லாம் எதுவும் வேணாம். இது ஒரு பொது நல விஷயம் தான்!

– ஆமாம் மேடம் நிச்சயமா அதுதான். அப்புறம் உங்களுக்கு அதைத் தெரிவிக்கிறோம்.

– சரி! இருந்துக்குங்க! பொறுப்பான ஆட்களை விடுங்க! இளம் பெண்ணுங்க படிக்குது.......

– எல்லாரும் ஆபீசருங்கதான் வருவாங்க! உங்களுக்கோ, அந்தப் பெண்களுக்கோ எந்த தொந்தரவும் வராது.

## 5

–லிங்! என்றார் சிங்.

காலையில் வந்த சிங் மேஜை மீது இருக்கும் கட்டுக்கட்டான பைல்களைப் பார்க்கவில்லை.

அதற்குப் பதில் அவனை அழைத்தது ஆச்சரியமாக் இருந்தது.

அறைக்குள் லிங்க் நுழைந்தான். அவனை சிங் உட்கார்த்தினார்.

அப்போது கதவைத் திறந்து டிப்டினாவர் ஆறுமுகம் ஒரு சிறுபெட்டியையும் ஒரு நீண்ட பெட்டியையும் கொண்டு வைத்து விட்டுப் போனார்.

– லிங்க்! இன்னிக்கு மத்தியானத்திலிருந்து புதியவேலை! பைலை எல்லாம் கட்டி வை!

– எஸ் ஸார்!

– உன்னை லட்சுமி நகர் இரண்டாவது ரோட்லே கொண்டு விடறேன்! அங்கே மாடியிலே ட்யூட்டி! நேரம் காலம்னு எதுவும் கிடையாது! வொயர்லெஸ்ஸை வச்சு தொடர்புக்கு ஏற்பாடு பண்றேன்! உனக்கு ரெஸ்ட் எடுக்கணும்னா மூர்த்தியை அனுப்பறேன்.

– எஸ் ஸார்!

– இது ஒரு 24 மணி நேர வேலை! பதினைஞ்சு நாள் கேஸில் சம்பந்தப்பட்டது.

– எஸ் ஸார்!

லிங்க் முகத்தில் வெளிச்சம் தோன்றியது.

– சவால் விட்டுட்டு வந்திருக்கேன். வேலையிலே கருத்தாக இருக்கணும்.

– எஸ் ஸார். நூறு சத கவனம்

– நீங்க இருக்கிற இடத்திலே இளம் பொண்ணுங்க நிறைய படிக்கும். கண்ணின் அவங்க மேலே திரும்ப வேண்டாம்.

– திரும்பாது ஸார் என்றான் லிங்க் முறுவலித்து.

– இதப் பாரு! இது பைனாகுலர்ஸ்

பெட்டியைத் திறந்து கரு கரு என்று மின்னும் பைனாகுலர்ஸை எடுத்தார்.

பிறகு நீண்ட பெட்டியைத் திறந்து டெலஸ்கோப் ஒன்றை எடுத்தார்.

– மாடியில் பெரிய ஜன்னல் இருக்கு! அதில் கர்டன் தொங்குது. அதன் இடைவழியே டெலஸ்கோப் வெளிமுனையை வெளியிலிருந்து பார்த்தா தெரியாத மாதிரி வைக்கணும். எதிர் வீட்டிலே மாடி ப்ளாட் இருக்கு. அதை வாட்ச் பண்ணணும்.

– ஓ!

– அங்கேதான் அந்த ஜோதிகா இன்னு மத்தியானத்திலிருந்து தங்கப் போறா. அது அவள் சொந்த ப்ளாட். பரோல்ல வரா.

– ஓ! என்று துள்ளினான் லிங்க்.

– ஜோதிகாவுடைய நடவடிக்கை. அங்கே யார் யார் வாராங்க என்கிறதை எல்லாம் வொயர்லெஸ்லே அப்பப்போ சொல்லணும். தெரு இரண்டு முனையிலும் மஃப்டி போலீஸ் வெவ்வேறு வேஷத்திலே இருப்பாங்க. மற்றதை அவங்க மூலமா நான் நிறைவேத்திப்பேன்.

– எஸ் ஸார்.

# 6

மாடி என்பது பெரிய அறை. வாசலை நோக்கி கிரில் அமைப்பு. அதன் பின்னால் வெளியே பார்க்க பிரதிப்பான கண்ணாடி அமைப்பு.

உள்ளே வெளிச்ச அளவுகளைக் கட்டுப்படுத்த குழலாக அதை மறைத்து திரை, இவற்றில் மறைவான இடைவெளி வகுத்து அதன் இடுக்கில் டெலஸ்கோப்பின் முன் பகுதி திருத்தப்பட்டிருந்தது. அது நேராக எதிர் வரிசையில் இருந்த மாடி பிளாட் குடியிருப்பின் ஹாலைச் சுத்தமாகப் பார்த்தது. ஜோதிகாவின் பிளாட் அது.

டெலஸ்கோப்பின் அடி ஸ்குருவைத் திருகினால், இந்தப்புறம் இடது அறையும், எதிர்புறம் வலது அறையும் தெரியும்.

லிங்க் உஷாரில் இருந்தான்.

பிளாட்டுக்கு ஜோதிகா 4.30 மணிக்கு வருவாள் என்று எதிர்பார்க்கப்பட்டது. மூன்று மணிக்கு அவள் விடுதலை செய்யப்படுவாள்.

வீட்டு சொந்தக்காரி அந்த மியூசிக் டீச்சர் அவனுக்குக் காப்பி கொணர்ந்து கொடுத்தாள். வளர்த்தியான மேனி. இறுகப் பிடித்த இடை. பழைய அழகு ஆங்காங்கு ஒட்டி இருந்தது.

உடம்பு தூசி துப்பு இல்லாத துப்புரவு. மிருது பிரதிபலிக்கும் சருமம். வெற்றிலை போட்டதுபோ உதடு முழுவதும் மிகைச் சிவப்பு.

காப்பியை அருந்தும் பாணியில் அவன் பேச்சைக் கொடுத்தான்.

– நீங்க வேலையில் இருக்கறீங்களா?

– இல்லைங்க. பாட்டு கிளாஸ் நடத்தறேன்.

காப்பியைச் சூப்பி முடித்தான் லிங்க்.

வீட்டில் ஆண் நடமாட்டம் இல்லை. அவனிடம் சுவாதீனமாக நடந்து கொள்வதன் மூலம் சிநேகத்தை உண்டு பண்ண முயல்வாளா?

சீ! பிரம்மச்சாரி மனது இப்படித்தான். யாரைப் பார்த்தாலும் காமம் தூண்டும்.

ஏதோ புண்ணியத்துக்கும் போலீசுக்கு உதவி செய்கிறாள் அந்த அம்மா. அவளைப் போய் ரொமாண்டிக்காக நினைத்தால்?

செய்தி வொயர்லெஸ்ஸில் வந்திருந்தது. மூன்று மணிக்கு ஜோதிகா வெளியே வருகிறாள் என்று.

லிங்க் தயார் ஆனான். அடிக்கடி டெலஸ்கோப்பில் கண்களை வைத்தான்.

பிறகு எழுந்து உலவினான். ஒரு சன்னலுக்குப் போய் அதன் இடுக்கில், எதிர்வீட்டு வாசல் முகப்பைப் பார்த்தான்.

நாலு மணி இருக்கும். காப்பி வந்தது. இளம் பெண் ஒருத்தி கொண்டு வந்து வைத்தாள். துறு துறு என்று வரும்போது கண்ணில் முறுவல் துவண்டு கண் கிட்டத்தட்டப் பேசியது.

அவள் குனிந்தபோது ஏப்ரான் சாயலில் இடை வளைந்தது. காப்பிக் கிண்ணங்களை அழகாக நடு மத்தி பார்த்து வைத்து நிமிர்ந்தபோது ஒரு பார்வையைச் சுட்டு விட்டுப்போனாள்.

நாலு நுந்துக்கு வெளியே சத்தம் கேட்டது. சன்னல் ஓரம் போய்ப் பார்த்தான். அவன் பார்வை தீவிரபட்டது. கீழே எதிர் வீட்டு வாசலில் ஒரு ஆட்டோ நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து ஜோதிகா இறங்கிக் கொண்டிருந்தாள். கையில் சாதாரணப் பை இருந்தது.

இறங்கியவுடன் இருபக்கமும் ஒரு சுப்பிர பார்வையை விடுத்தாள். மணிபர்சைத் திறந்து நோட்டை உருவி டிரைவரிடம் கொடுத்தாள்.

பாக்கி சில்லறை வாங்கிக்கொள்ளவில்லை. டிரைவர் அடித்த சல்யூட்டிலிருந்து தெரிந்தது.

உள்ளே அவள் மறைய, லிங்க் ஹால் ஓரம் ஓடினான். நாற்காலியில் சாய்ந்து டெலஸ்கோப்பில் கண்களை வைத்தான்.

ஒரே இருட்டு.

இன்னும் எதிர் அப்பார்ட்மெண்டில் வெளிச்சம் வரவில்லை. காத்திருந்தான். இரண்டு நிமிடம் சென்றது. டெலஸ்கோப் உயிர் பெற்றது. எதிர்வீட்டு ஹால்

வெளிச்சமாகியது.

உடனே ஜோதிகா பதுமைபோல் வந்தாள். ஒவ்வொரு அடியும் மெதுவாகப் பதிந்தது. நடு ஹாலில் தயங்கி நின்றாள். ஒரு சுற்றும் பார்வையைச் சுழற்றினாள்.

முகம் க்ளோசப்பில் நன்றாகத் தெரிந்தது.

வனப்பான முகம். நெற்றி ஓரமாக இரண்டு ரோம இழைகள். கன்னம் வரை இறங்கியிருந்தன. க்ரீம் நிற சருமத்தில் அவை மென்மையாக ஆடின. வெண்மையான கழுத்தில் பிடரி குறுகுறுத்தது.

சற்று நேரம் நின்றவள் பிறகு சோபா பக்கம் போனாள். அதில் 'தும்' என்று குலுங்க அமர்ந்தாள்.

சிலை போன்ற ஸ்திரம். அசைவில்லை. வெகுநேரம் அந்த நிலையை விட்டு எழுந்திருக்கவில்லை.

ஒரு ஆளைக் கண்காணிக்க வேண்டுமானால் அதைவிட அறுவை உத்தியோகம் வேறு எதுவும் வேண்டாம். உலகத்தில் பெரிய தண்டனை அதுவாகத்தான் இருக்க முடியும். இரவு ஏழு மணி வரை அப்படித்தான் இருந்தாள். அந்த நேரம் வரை அடிக்கொருமுறை டெலஸ்கோப்பை அவன் பார்க்கவேண்டி வந்தது.

நல்லவேளை. 7.05 மணிக்கு அவள் கீழே இறங்க ஆரம்பித்தாள். விளக்குகளும் அணைந்தன.

லிங்க் உடனே மேஜைப் பக்கம் ஓடினான். ஸ்விட்சை அழுத்தி வயர்லெஸ்ஸை இயக்கினான்.

– ஹலோ! எம் 28! வி ஜி 32 பேசறேன். எம் 28! நான் வி.ஜி. 32 பேசறேன்! என்றான்.

– எம் 28! பேசறோம். வி.ஜி. 32 பேசலாம்.

– இங்கே ஜோதிகாவைக் கண்காணிச்சுக் கிட்டிருக்கேன். ஜோதிகா இப்போ அப்பார்ட்மெண்ட்டை விட்டு கீழே இறங்கறா. ரோட் ஸ்டாஃப்புக்குத் தெரியப்படுத்தவும் ராஜர்!

– எம். 28! உங்க செய்தியைக் குறிச்சாச்சு. முடிச்சுடறோம். ராஜர்.

லிங்க் ரிஸீவரை வைத்தான். இனிமே கொஞ்சம் விச்ராந்தியாக இருக்கலாம் என்று எண்ணினான்.

## 7

ஜோதிகா இருந்த அப்பார்ட்மெண்டை நான்கு நாள் கண்காணிப்பதற்குள் பெரும்பாடாகிவிட்டது. அவளது நடவடிக்கைகளில் எதுவும் விசித்திரமாகத் தெரியவில்லை.

உட்கார்ந்தாள், பிறையோடு பார்த்தாள். சமயத்தில் எதாவது ஒரு புத்தகத்தைப் படித்தாள். படுக்கைக்குப் போனாள். சாப்பாடு வேண்டும் போது ஓட்டலில் சாப்பிட்டாள்.

மற்றபடி எந்த நடவடிக்கைகளும் அவளிடம் தென்படவில்லை. லிங்குக்கு ஓய்வு வேண்டிய போது உதவியாக திலக், மூர்த்தி என்ற இரு போலீஸ் இளைஞர்கள் டெலஸ்கோப்பை இயக்கினார்கள்.

லட்சுமி நகர் இரண்டாவது தெரு. சிங் மஃப்டியில் நடந்தார். சாலை ஓரமாக மஃப்டியில் இருக்கும் ஆண், பெண் போலீசாரை அவர் அடையாளம் கண்டுகொண்டார்.

பெண் போலீஸ் ஒரு பிச்சைக்காரி வேடத்தில் அமர்ந்திருந்தது. அவரை வெகுவாகக் கவர்ந்தது.

மியூசிக் டீச்சர் வீட்டை அடைந்தார்.

டீச்சர் வரவேற்றாள்.

மாடியில் ஏறினார்.

முதல் பார்வையில் லிங்க் தெரிந்தான்.

சல்யூட் அடித்தான்.

டெலஸ்கோப் தயாராக இருந்தது.

– என்ன நடக்குது? என்று கேட்டார்.

– ஜோதிகா நடமாட்டம் எல்லாம் தெரியுது! என்றான் லிங்க்.

தொடர்ந்து, – ஸார்! காலையிலே அவள் போகா பண்றா! என்றான் லிங்க்.

சிங் டெலஸ்கோப் பக்கம் சென்றார்.

அதன் ஐ-பீஸ் வழியாகப் பார்த்தபோது எதிர்வீட்டு ஹால் தெரிந்தது. அதன் சோபாவில் ஜோதிகா படுத்திருந்தாள். படுத்திருந்த நிலை சரியில்லை. கால் பாகம் அவளது திசையை நோக்கி இருந்தது. சாரி உடுத்திக் கொண்டு, கால்களை

அசையவிட்டவாறு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள். ஒரு பக்கத்து முட்டுத்தான் ஸாரிக்குள் மறைந்திருந்தது. மற்றொன்று வெளியில் நீட்டியிருந்தது. அவளது நீண்ட கால் பாதித் தொடை வரை செக்கச் செவேல் என்றிருந்தது. நல்ல செழுமை. அதன் காரணமாய் தொடைகளில் வெளிச்சக்கீற்று ஆகாயப் பால்வெளிபோல் தெரிந்தது.

கால்களை மாறி மாறி அசைக்க அதன் அசைவுகளைப் பார்ப்பவர்களுக்கு போதை தந்தது.

— ஓகோ! காலையிலே பேர்கா! மாலையிலே இப்படியா? என்று நினைத்தார் சிங்.

ஜோதிகாவின் மேல் பாகங்கள் பருத்து விம்மியிருந்தன.

அவை நெருக்கமாகத் திரும்பியிருந்தன. பிரத்தியேகமான பவுன் நிறத்தில் இருந்தன. ஒரு ஸ்தூபியின் வளைவும் கூம்பலும் கொண்டு யார் பார்த்தாலும் மனசைத் தத்தளிக்க வைக்கும் நிலையில் இருந்தன.

சிங் காத்திருந்தார். அவளது ஒரு கால் ஆட்டம் அதிகமாக இருந்தது. ஒரு முறை இடது கையை ஸாரிக்குள் செலுத்தி எதையோ சீர்திருத்தியதுபோல் அபிநயித்தாள். ஜட்டியாக இருக்கும்.

சிங் காத்திருந்தார்.

அரைமணி ஆகியது. ஜோதிகா எழுந்திருப்பது தெரிந்தது. ஒரு முறை எதிர்வீட்டைப் பார்ப்பது போல் தெரிந்தது. பிறகு திரும்பினாள்.

புத்தகத்தை தூர வைத்துவிட்டு அடுத்த அறைக்குள் புகுந்தாள்.

இடது பக்க அறையுள் ஜோதிகா போனதும் சிங் டெலஸ்கோப்பை மென்மையாக திருப்பினார்.

அது படுக்கை அறை!

விளக்கைப் போட்டிருந்தாள் ஜோதிகா. சுவரோரம் கட்டிலும் மெத்தையும். எதிரே கண்ணாடி.

ஜோதிகா அதன் முன்னால் சிறிது நின்றாள். பிறகு ஸாரியை நெகிழ்த்தி அவிழ்த்தாள். கீழே அது விழுந்ததும், குவியலாக எடுத்து மடித்து அலமாரிக்குள் வைத்தாள்.

ஜோதிகாவின் மானம் இரண்டு சின்னத் துணிக்குள் மறைந்து இருந்தது. படுக்கையில் உட்கார்ந்தாள். பின்புறம் தலையணிகளைக் கோத்து வைத்து ஒரு சாய்மானம் உருவாக்கினாள். அதில் சாய்ந்தாள். திரும்பவும் கால்கள் டெலஸ்கோப்பை நோக்கி இருந்தன. சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். கண்கள் குறுகுறுத்து அலைந்தன.

நல்ல கட்டுமான உடம்பு.

மேலே ப்ரா கொள்ளாது விழித்தன.

கீழே ஆழமான தொப்புள்.

அதைச் சுற்றி சன்னமான மயிர்க் குருத்துகள். தொப்புளுக்குக் கீழே அவை சற்று அதிகம் கொழித்து அடர்ந்து இருந்தன. பார்ப்பதற்கு ஏதோ வண்டல் படிந்து இருக்கும் பிரமை. இந்த மென்மை ரோமச் செழிப்பு ஆற்றுப் படுகை போல மென்மையாகப் படிந்து கீழே கீழே இறங்கி.....

அவள் ஜட்டியில் விரல்களைச் செலுத்தினாள்.

இருபக்கமும் நெகிழ்த்தினாள்.

ஜட்டி விரல்களைக் கீழே கொஞ்சம் தாழ்த்தினாள். அவளது பாதி அவயம் இப்பொழுது கண்ணுக்குப் புலப்பட்டது.

டெலஸ்கோப் வெட்கமில்லாமல் அதைக் காட்டியது. இரண்டு தொடைகளும் வெள்ளிப் பாளங்களாக விரிந்தன. செழுமையின் பளபளப்பு இங்கிருந்தே தெரிந்தது.

திடீரென்று ஏதோ கேட்டது போல் எழுந்தாள்.

அடுத்த அறைக்குள் ஏதோ நிகழ்ந்து இருக்கவேண்டும். ஜட்டியை இழுத்துப் பழைய நிலைக்குக் கொண்டு போனாள். கட்டிலைவிட்டு இறங்கி, சாரியை எடுத்து அவசரமாக அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

சிங் அவசரமாக அந்த அறையின் அமைப்பைப் பார்த்தார். நிலைக்கண்ணாடி மேலே ஏதோ ஒரு படம் இருந்தது. சுவாமி படமாக இருக்கலாம். அதன் தலை மீது இருந்த சின்ன பல்பு பளிச்சென்று எரிந்து அணைந்தது. அதைச் சிங் உணர்ந்து கொண்டார்.

அதுதான் அவளை இழுத்த சின்னம்.

ஜோதிகா புன்னகையோடு அடுத்த ஹாலுக்குள் நுழைந்தாள். கதவைத் திறந்தாள்.

இருபக்கமும் எச்சரிக்கையாகப் பார்த்தாள். ஒரு இளைஞன் உள்ளே நுழைந்தான். அவனிடம் அவள் ஏதோ பேச, அவன் தன் பையிலிருந்து எதையோ எடுத்து உள்ளங்கையில் வைத்துக் காண்பித்தான்.

சிங் டெலஸ்கோப்பை சரித்துப் பார்த்தார். இருந்தும் அந்தக் கோணத்தில் கைக்குள் இருப்பது தெரியவில்லை.

இளைஞனும், அவளும் பேசினார்கள்.

பிறகு அதை ஜோதிகா கையில் கொடுக்க, ஒரு நாலிழைபோல் ஏதோ தெரிந்தது.

அதை அவனிடம் கொடுத்துவிட்டு ஜோதிகா யோசித்தாள். பிறகு விசேஷமாக அவனிடம் சொல்வதுபோல் நெருங்கிப் பேசினாள். பேச்சு முடிந்ததும் அறைக்குள் இருபக்கமும் பார்த்தாள்.

பிறகு நுனிக்காலில் நடந்து மேஜையை அடைந்தாள். அதில் இருந்து ஒரு காகிதம் எடுத்து எழுதினாள்.

பிறகு அவனிடம் வந்து காகிதத்தைக் கொடுத்தாள்.

அதைப் பார்த்துவிட்டு அவன் சைகை காண்பித்து ஏதோ கேட்டான். அவள் ஒன்றிரண்டு இடத்தில் மறுத்து, தனது கையால் திசை திருப்பிக் காட்டினாள்.

கடைசியில் அவன் விடை பெற்றான்.

— இரு! என்பது போல் அவனுக்கு கை காட்டிவிட்டு ஜாக்கிரதை அடிகள் வைத்து முகப்பு பால்கனிக்கு வந்தாள். பால்கனியில் காலை வைப்பதற்குள் சற்று நின்றாள். எதிர்ப்புறம் உள்ள கட்டிடங்களை ஒரு பார்வை பார்த்தாள்.

முன்பு போல எச்சரிக்கைகள்.

பால்கனி விளிம்பில் குனிந்து சாலையை இருபுறமும் நோக்கினாள். அதில் சிறிது நேரம் போக்கினாள். பிறகு மௌனமாக உள்ளே போனாள்.

அவனைப் பார்த்து, — நீ போகலாம் என்று தலை அசைத்தாள். ஆசாமி அந்த ஹாலை விட்டு வெளியே போனான்.

சிங் துள்ளித் தாவி சன்னலுக்கு ஓடினார்.

கீழே கட்டிடத்து நீண்ட வாசலில் சுவர் ஓரமாக ஒரு பழைய சைக்கிள் சாய்த்து இருந்தது. அதன் குறுக்கு 'பாரில்' 'மதுரா வெண்ணெய்' என்று ஒரு விளம்பரத் தகடு தொங்கியது. பின்புறத்தில் ஒரு டப்பா தாம்புக்கயிறில் கட்டுண்டு நின்றது.

சிங் வயர்லெஸ் மைக்கை இழுத்தார்.

— ஸிஜி.32 பேசறோம்! ரெடி. ரெடி ஆல் ஸ்டேஷன்ஸ்!

ஒவ்வொரு ஸ்டேஷனும் நம்பர் பிரகாரம் 'ரெடி' தெரிவித்தன.

சிங் சன்னல் ஓரம் கவனத்தை வைத்து இருந்தார்.

மேலேவிடைபெற்று விட்டுப்போன ஆசாமி கீழே இறங்க அவ்வளவு நாழிகை ஏன் ஆயிற்று? தெரியவில்லை.

வெளியே வந்தவன் சாலையை நாலுக்காகப் பார்வை பார்த்தான். பிறகு சைக்கிளை நோக்கி நகர்ந்தான். பூட்டுச் சங்கிலியைக் கழற்றினான். ஏறி உட்கார்ந்து வடக்குப் பக்கம் போக ஆரம்பித்தான்.

-சிங் டக்கென்று விசையைத் தட்டினார்.

— ஸிஜி.32 பேசறோம். ஆல ஸ்டேஷன்ஸ் அட்டென்ஷன்! எம் நம்பர்கள் உடனே ஒரு சைக்கிள்காரனைப் பின்பற்றணும். சைக்கிளிலே 'மதுரா வெண்ணெய்'னு போட்டிருக்கும். ஒருத்தர் பின்னாடி ஒருத்தராக ரெண்டு பார்ட்டி பின்பற்றட்டும். சீக்கிரம்! ராஜர்!

— எஸ் சார். எம் 28 பின்னாடி போறோம். ராஜர்!

— எம் 16 பேசறோம். 28க்கு பின்னாடி நாங்க போறோம் ராஜர்!

சிங் பேசினார். — ஸிஜி 32! பின்பற்றுகிற பார்ட்டிங்க ரிப்போர்ட் கொடுத்துக்கிட்டே போகணும் ராஜர்!

பார்ட்டிகள் இரண்டும் 'மதுரா' ஆசாமியை அடையாளம் கண்டுவிட்டன.

அவன் பின்னாடி ஜாக்கிரதையான தூரங்களில் பிரயாணம் செய்தன.

கிண்டி சாலை.

காந்தி மைதானம்.

எஸ்.ஆர்.கஸ்தூரி.

என்று அவை தங்கள் இடங்களைக் குறிப்பிட்டுக் கொண்டு சென்றன. சிங் ஒரு நிம்மதி மூச்சைத் தெறித்தார்.

நல்லவேளை! எதேச்சையாக வந்தது சரியாகப் போயிற்று! இன்று தான் ஏதோ நடவடிக்கை நடக்கிறது. அது நல்ல பலனில் கொண்டு விட்டாலும் விடும்.

மஸ்பித் சந்தைரோடு.

வீணா டாக்கீஸ்.

சிங் காதுகளில் இடங்கள் விழுந்து கொண்டிருந்தன.

திரௌபதி அம்மன் கோவில் வந்ததும் அவருக்கு அந்தப் பிரயாணம் புரிந்துவிட்டது.

அநேகமாக மாந்தோப்பு மயானத்திற்கு தான் போகிறது.

ஆகா! இன்று ராத்திரி சிவராத்திரியா?

மீண்டும் வயர்லெஸ்ஸை முடுக்கினார். விங்கை அருகே வரும்படி கூறினார்.

வயர்லெஸ் கரகரத்தது.

– பார்ட்டி எங்கே போறார்?

– எம். 28 ஹியர்! மாந்தோப்பு மயானத்துக்குள்ளே சைக்கிள் போயிருக்கு ராஜர்!

– வி.ஜி.32 பேசறேன்! எம் 28 சைக்கிள் கேட்டுக்குள்ளே போயாச்சா?

– போயாச்சு!

– உள்ளே கவனிக்கணுமே?

– கவனிக்கிறோம். சைக்கிளை விட்டுட்டு பார்ட்டி இறங்கிப் போறாரு. இங்கே ஒரே இருட்டு! பத்தடியில் ஆள் தெரியலை. மயானத்திலே நிறைய மரங்கள் இருக்கு. இடுகாடு வேற. நிறைய சமாதிங்க ஆள் உயரத்திற்கு நிக்குது. வடக்கால, கிழக்கால நம்ம ஆளுங்க நின்னா நல்லாருக்கும். இன்னும் ரெண்டு பார்ட்டி வேணும் ராஜர்!

– அனுப்பறோம் கவனமாக இருங்க! ராஜர்

சிங் உடனே அடுத்த பார்ட்டிகளை அனுப்பும்படி போன் செய்தார்.

## 9

வாசலுக்குப் போனதும் பிளாட்பாரத்தில் நடந்தார். வெளியே நன்றாக இருட்டியிருந்தது. சாலை சுற்றுவட்ட விளக்குகள் சின்னச் சுடர்களாகத் தெரிந்தன.

சிறிது தூரம் சென்று அடுத்த தெருவில் திரும்பினார். இன்னும் இரண்டு தெருக்களைக் குறுக்காக வெட்டிய பிறகு அடுத்த சாலையோரம் ஒரு மரத்தடியில் அவரது ஜீப் மறைந்து நின்றது. தாவி ஏறிப் புறப்பட்டார்.

காந்தி மைதானம் வழியே பறந்தது.

திரௌபதி கோவிலைத் தாண்டியதும் தேர் முட்டியோரம் நிறுத்தச் சொன்னார்.

ஜீப் நின்றது.

சிங் இறங்கினார்.

விளக்கில்லாத நடைபாதையில் நடந்து போகத் தொடங்கினார். நகரத்தின் குடியிருப்புகளுக்கு இரண்டு மைல் அப்பால் இருந்த இடம் அது.

இருட்டு நன்றாகப் பசிபட்டுப் பருமனாக வியாபித்திருந்தது. ஒரு பொட்டு வெளிச்சம் எங்கும் இல்லை. வானமும் பூமியும் ஒன்றாகச் சேர்ந்து இருட்டில் மூடியிருந்தன. காற்று ஒன்று சீராகக் காதில் குழல் வாசித்தது. தரிசைப் புறத்தின் வெறுமையான வாடை மூச்சை அரித்தது.

இடையே சுட்ட களிமண் வாடையும் நெருங்கியது. சமீபத்தில் எதாவது பிரேதம் எரிந்திருக்க வேண்டும்.

இருட்டில் பத்தடி தெரியவில்லை. இதில் மரங்கள் வேறு நிலைமையை மோசமாக்கின. தன் காலடி ஓசைகூட அவருக்கு நாராசமாகப்பட்டது. அடிக்கடி நின்று ஏதாவது சப்தம் வருகிறதா என்று பார்த்துக் கொண்டார்.

இடுப்பில் வாக்கி டாக்கி உதைத்தது. சுவாசத்தைக் கூட மெதுவாக விட்டு நடந்தார்.

மயானப் பிரதேசம். பெரிய விஸ்தாரத்தை வளைத்துப்போட்டு இருந்தது. இதில் வடக்கும் கிழக்கும் காடு போல வளர்ந்து மனித சஞ்சாரத்திற்கு லாயக்கற்றதாக இருந்தன. மேற்கில் ஒரு ஓடை ஒரு பள்ளத்தாக்காக இருந்தது.

நகரிலிருந்து வரும் கழிவு நீர் அதில் பாய்ந்து சதுப்பு நிலமாக மாற்றி இருந்தது.

இரண்டொரு பேர் அதில் அகப்பட்டு இறந்துவிட்டார்கள் எனச் செய்தி உண்டு. அந்த இடத்தில் யாரும் இறங்கி மேற்கு பக்கம் போக முடியாது.

எவ்வளவோ போன இடம்! இப்பொழுது உத்தேசமாகத்தான் நடந்தார். இதற்குள் மயான எல்லை வந்திருக்க வேண்டும். அந்த சிகரெட் வாடை அவருக்குக் கோபத்தை கொடுத்தது. தனது ஆட்களில் யாரோ சிகரெட் குடிக்கிறார்கள்?

இந்தச் சமயத்தில் சிகரெட் பிடிப்பது பெரும் தவறு.

நின்றார் சிங்.

இனிமேல் யோசித்துத்தான் நகர வேண்டும்.

நாலு பக்கமும் பார்வையில் துழாவினார். ஆகாயம் கூடத் தெளிவாகயில்லை. நட்சத்திரங்களைக் காணோம்.

நின்று ஆசுவாசமான பிறகு சிறிது சிறிதாக வடிவங்கள் பிரசன்னமாகத் தொடங்கின.

இருட்டுக்குக் கண் பழக்கப்பட்டு விட்டது. மெல்லிய வயலட் கதிரில் தெரிவது போன்று உருவங்களின் வெளிக்கோடுகள் புரிய ஆரம்பித்தன.

சுடுகாட்டு கேட் இன்னும் சற்று தூரத்தில் தெரிந்தது. அந்த கேட்டில் இரண்டு கல் தூண்கள் நட்டிருந்தன. அவை இப்பொழுது மனித உருவங்கள் போல் தெரிந்தன.

வாசலில் இருபுறமும் முள் கம்பி வேலி வேயப்பட்டிருந்தது. சம தூரங்களில் இருந்த குட்டையான கற்கள் அந்தக் கம்பிகளைத் தாங்கியிருந்தன.

உள்ளே இலுப்பை மரங்கள் ஏதோ ராட்சத உருவங்கள் கைகளை விரித்து நிற்பதுபோல் தோன்றின.

இடுகாட்டுச் சமாதிகள் இப்பொழுது தெரிய ஆரம்பித்தன. பெரிதும் சிறிதுமாகச் சமாதிகள் ஒரு சிவலிங்கத்தின் வடிவில் துல்லியமிட்டுத் தெரிந்தன. பலவற்றின் ஸ்தூபிகள் கூர்மையான உச்சங்களுடன் தெரிந்தன.

சத்தமா அது? இல்லை. நிசப்தம்! ஆனால் சுடுகாட்டு நிசப்தத்திற்கு அலாதி ரூபம் இருந்தது. அந்த நிசப்தத்திற்கே ஒரு சப்தம் இருப்பது போன்று இருந்தது.

அது போல் மயானத்தின் நிழல்களுக்குச் சலனம் இருப்பதுபோல் இருந்தது. மயானத்தைச் சுற்றியுள்ள ஜடப் பொருள்களுக்கு இரவில் உயிர் வருவது போல் இருந்தது.

கிர்ர்ர்ரிச்.... கிர்ர்ர்ரிச்....

அந்த நுட்ப சப்தம் அவருக்குப் புரிந்துவிட்டது. சற்று தூரத்தில் பாட்டி ஆள் யாரோ இருக்கிறார்கள்? அவர்கள் தற்பொழுது வயர்லெஸ்ஸை இயக்கி இருக்கிறார்கள். வயர்லெஸ் விழித்துக் கொண்ட 'கிர்ர்ர்ரிச்' சப்தம் அது.

அது வந்த திசையை சிங் புரிந்து கொண்டார். எழுந்தார் ஓசையில்லாமல் நடந்தார்.

தரை மீது இருட்டு அதிகமாக இருந்தது. வடிவங்கள் சரியாகத் தெரியவில்லை. ஒவ்வொரு அடியாக வைத்து போக, ஒரு குவியலான நிழலை அவர் புரிந்து கொண்டார்.

– ஏஜி 32! என்றார் அவர் மென்மை உச்சரிப்பாக.

அருகில் சென்றதும், – இன்ஸ்பெக்டர் சிங்! என்று அறிமுகப்படுத்தினார்.

– சார்! 138 நான். நம்ம ஆட்கள் வெவ்வேறு தூரத்தில் இருக்காங்க!

– சைக்கிள் ஆசாமி எங்கே?

– மயானத்துள்ளே போயிருக்கான்.

– யாரும் பின்பற்றலையா?

– பதியும், குமாரும் போயிருக்காங்க.

– எவ்வளவு நாழியாச்சு?

– ஒரு மணிக்கு மேல் ஆச்சு.

– திரும்பி வரலையா?

– இல்லை சார்!

– ஆசாமியோட சைக்கிள் எங்கே இருக்கு?

– உள்ளே ஒரு சமாதி மேலே சாத்தி வைச்சிருக்கான்.

– அங்கே நம்ம ஆள் இருக்கா?

— மணிகண்டன் இருக்காரு.

— சரி! பேச்சை ஆசாமி வேற வழியில 'தப்பாமக் கவனிச்சுக்கிட்டு இருக்கீங்களா?»

— நம்ம ஆளுங்க வேலியோரமா அங்கங்கே நிற்கிறாங்க. மேற்கால மட்டும் ஆள் வர முடியும். மத்த திசையில் முடியாது.

— ஒரே இருட்டா இருக்கே? எப்படிக் கண்காணிக்க முடியும்?

— சார்! எல்லோரும் அங்கங்கே உட்கார்ந்திருக்காங்க! யார் நடந்தாலும் கால் சப்தம் கேட்கும். அதை வெச்சுத்தான் கண்டுபிடிக்க முடியும்.

சிங் அங்கே அமர்ந்து விட்டார்.



ஒரு மணி நேரம் அங்கேயே இருந்த பிறகு சிங் எழுந்தார். எல்லோருக்கும் எச்சரிக்கை விடுத்துவிட்டு அவர் மயானத்துள் நுழைந்தார்.

இருபக்கமும் இரு கல் தூண்கள் நடுவில் வாசல்.

பூனைப் பாதம் வைத்து உள்ளே நுழைந்தார். முதலில் இடுகாடு. எதிரே சமாதிகள் குட்டையும், நெட்டையுமாயிருந்தன. ஒவ்வொரு சமாதியிலும் ஒவ்வொரு ஆள் உட்கார்ந்து இருப்பது போல் பிரமை கொடுத்தது. சிலர் நிமிர்ந்து நிற்பது போல் தோன்றியது.

சிங் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

இரவு என்பது எவ்வளவு வித்தியாசத்தை உண்டு பண்ணுகிறது. நிஜத்தைப் பூரா வும் மாற்றி நிஜமில்லாததை நிஜமாகக் காட்டப் பார்க்கிறது. அங்கிருக்கும் நிழல்கூட எழுந்து அவரோடு வரும்போல் இருந்தது.

முதலில் ஒரு சமாதியோரம் ஆசாமியின் 'மதுரா வெண்ணெய்' சகிதம் சமாதி மீது சைக்கிள் சரிந்து கிடந்தது.

ஒரு யோசனை?

அதன் அருகில் அமர்ந்தார். அதன் செயினைக் கழற்றிவிட்டார்.

சமாதிகள் ஊடே மெல்ல நடந்தார். ஒரு இடைவெளியில் நின்றார். அது வெகு தூரம் வரை இடைவெளியாகத் தெரிந்தது.

சமாதிகள் வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. பத்து வரிசை வரை சரியாக இருந்தது. பிறகு சமாதிகளிடையே ஒழுங்கு இல்லை. இஷ்டப்படி கட்டப்பட்டு இருந்தது. ஆனால் அவை யாவும் சிறியவையாக இருந்தன. ஆதலால் அவற்றின் இடைவெளியில் ஆசாமி யாராவது இருக்கிறானா என்று பார்க்க முடிந்தது.

சமாதிகளின் நுல்லிய வடிவங்களைத் தவிர, வேறு சந்தேக நிழல்கள் எதுவும் இல்லை.

சமாதிகளை முடித்துவிட்டார். இப்பொழுது ஒரு எண்ணம். சில சமாதிகள் பெரிதாகயிருந்தன. சிலவற்றில் சின்ன அறைகளும் இருந்தன. உள்ளே சிவலிங்கங்கள்!

இந்த அறைகளுக்குள் ஏதாவது நடக்க வாய்ப்பு இருக்கிறதா?

அறையுள்ள பெரிய சமாதிகளை நாடிச் சென்றார். ஒரு சமாதி மீது உயரத்தில் அறை. சமாதியில் ஏறுவதற்கு இரண்டு படிகள்.

ஏறினார். அறை திறந்திருந்தது.

உள்ளே ஏதாவது பாதாளம் இருக்கிறதோ?

சமாதி மீது ஏறும்பொழுது நெஞ்சு படபடத்தது. அறைக்குள் பார்வை செலுத்தினார்.

அறை என்ன இருட்டு?

உள்ளே ஒரு எலும்புக்கூடு உட்கார்ந்து இருப்பதுபோல் பிரமை!

பெரிய சமாதிகளைச் சுற்றி முடிக்க அரைமணி நேரம் ஆகியது. எந்தத் தடயமும் இல்லை. இனி சுடுகாட்டுப் பகுதி நோக்கிப் போனார்.

சில அடிகள் வைத்தார். 'சுரீர்' என்று காலில் சுடு தெரியத் திடுக்கிட்டுக் கீழே பார்த்தார். அவர் காலைச் சுட்டது பூமிதான்! சிங்கின் இரண்டடி முன்னால் ஒரு சிதை தெரிந்தது.

பகலில் எரிந்து தணிந்து இருக்க வேண்டும். அங்கங்கே விளம்புகளில் அழல் தெரிந்தது.

நல்லவேளை. காலை வைக்காமல் தப்பினார்.

கட்ட மண் வாடையும் சருமம் எரிந்த வாடையுமே மூக்கில் ஏறின.

இன்னும் ஏதாவது சிதைகள் இருக்கின்றனவா என்று பார்த்தபொழுது பார்வை சற்று எட்டத்தில் தரையில் ஏதோ கிடப்பதைக் கணித்துக் கொண்டது.

என்னது அது?

அருகில் சென்றார்.

கசீர் என்று ஒரு கொத்து பீதி அவர் முகத்தில் அடித்தது.

கீழே யாரோ சுருண்டு கிடந்தார்கள்.

வேட்டியின் வெள்ளை மட்டும் எடுப்பாக தெரிந்தது.

யார் அது?

அதட்டலாமா?

அதற்குள் யோசனை?

தேடிவந்த ஆசாமி இவனாக இருக்குமா?

வேறு ஆளாக இருந்தால்?

அவனைத் தேடியாகிவிட்டது. சமாதிகளில் அவன் இல்லை. தரிசை வெளியில் எங்கேயாவது இருந்தால் உண்டு.

அவன் எங்கே இருந்தாலும் மயானத்தை விட்டு வெளியே போக முனைந்தால் அவரது ஆட்கள் பிடித்து விடுவார்கள். சைக்கிளைக் கூட அவன் எடுக்கமுடியாது. அதன் அருகில் அவரது ஆள் தயாராகயிருக்கிறான்.

இனி மேலும் எச்சரிக்கை வேண்டாம் என்று எண்ணி பாக்கெட்டுக்குள் கைவிட்டு பென்சில் டார்ச்சை எடுத்தார். கீழே கிடக்கும் உருவம் மீது செலுத்தினார்.

நாற்பது வயதிருக்கும். ஒரு ஆசாமி சுருண்டு கிடந்தான்.

முகத்தில் தாடி வளர்ந்திருந்தது. பக்கத்தில் ஒரு கம்பு கிடந்தது.

– யாரப்பா?

முதன் முதலில் குரல் நல்ல தொனியில் கேட்டது.

– யாரப்பா? எழுந்திரு!

கம்பை எடுத்தார். மெள்ள உசுப்பினார்.

நாலைந்து முறை உசுப்பலுக்குப் பிறகு அவன் முனகினான்.

இதற்குள் மயானத்துள் இருந்த அவரது ஆட்கள் டார்ச்சை தைரியமாக அடித்து அவர் பக்கம் வந்தார்கள்.

நிற்பது இன்ஸ்பெக்டர் சிங் என்று தெரிந்ததும் ஓங்கி சல்யூட் அடித்தார்கள்.

– இந்தா எழுந்திரு!

ஒரு காவல்காரன் அந்த ஆளை எழுப்பி உட்கார்த்தினான். கண்களைத் திறந்து அவன் எல்லோரையும் ஆச்சரியமாகப் பார்த்தான்.

குடித்துவிட்டு போதையில் இருந்தான் அவன். இப்பொழுது போதை சற்றுத் தெளிந்திருந்தது.

– நான் வாட்ச்மேனுங்க.

– இந்த மயானத்துக்கா?

– ஆமாங்க.

– ஏன் இப்படிக் கீழே கிடக்கிறே?

– அதான் தெரியலை. வீட்டுக்குப் போயிட்டிருந்தேன்.

– மயானத்தில் ராத்திரி எத்தனை மணி வரை இருப்பாய்?

– பத்து மணிவரைங்க.

– அப்புறம்?

– அதுக்கப்புறம் பிரேதம் எதுவும் கொண்டு வரமாட்டாங்க. நான் வீட்டுக்குப் போயிடுவேன்.

– இன்னிக்குப் பிரேதம் ஏதாவது வந்திச்சா?

– காலையிலே வந்திச்சிங்க. ராத்திரி கிடையாது.

– அளவுக்கு மீறிக் குடிப்பியா?

– சமயத்தில் குடிச்சுடுறது தான்.

– வாட்ச்மேன்! இந்த மயானத்திலே கொஞ்ச நாளா யார் யாரோ வந்து போறாங்கன்னு கேள்விப்பட்டோமே?

இந்த சமயம் வாட்ச்மேனுக்கு சற்று உணர்வு வந்துவிட்டது. தன்னை விசாரிப்பவர் முக்கியமான ஆபீசரு என்று நினைத்தான். எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை.

– பரவாயில்லை. உட்கார்ந்துகிட்டே பதில் சொல்லு.

– இல்லீங்க எஜமான்! இங்கே யாரும் வந்து எதுவும் செய்யறதில்லீங்க. நான் இல்லாட்டி யாராவது இங்கே வந்து சீட்டு விளையாடுவாங்க. அதுவும் சின்னப் பசங்க தான் வருவாங்க.

– சத்தியமாச் சொல்லு?

– சத்தியமாத்தாங்க.

சிங் தமது ஆட்களை நோக்கித் திரும்பினார்.

– நான் எல்லா இடத்தையும் பார்த்தாச்சு. நீங்களும் ஒருமுறை செக் பண்ணுங்க. இனிமே வெளிப்படையாப் பாருங்க.

விசில்கள் ஊதப்பட்டன. பலர் உள்ளே நுழைந்தார்கள். வெளிச்சத் தூண்கள் போல டார்ச் கம்பங்கள் எழுந்தன. மயானத்தில் பல பகுதிகளில் வெளிச்சங்கள் ஊடுருவின.

ஆனால் யாரையும் காணவில்லை.

காட்டுப் பகுதியின் துவக்கம் வரை சோதனை நீடித்தது.

காலை நான்கு மணியாகிவிட்டது. சிங் புதிய போலீஸ் பார்ட்டிகளை வரவழைத்தார். மயானத்திற்குக் காவல் போட்டுவிட்டு மற்றவர்களை இளைப்பாறுவதற்காக வீட்டிற்கு அனுப்பினார்.

# 11

காலையில் எழுந்து குளித்துத் தயாராகி ஒன்பது மணிக்கு சிங் மீண்டும் மயானத்தை அடைந்தார்.

சைக்கிள் இருக்கும் இடத்தைப் பார்த்தார். இன்னும் அப்படியே இருந்தது. யாரும் எடுத்துப் போகவில்லை என்றார்கள்.

சிங்குக்கு முகம் சுருங்கியது. எதிராளி சாமர்த்தியசாலியாக இருந்தால் அது அவரது திறமைக்குச் சவால் என்று தோன்றும்.

ஒகோ! தன்னைப் பின்பற்றுகிறார்கள் என்று அறிந்து ஆசாமி பதுங்கிவிட்டானா? அவனை விடக் கூடாது.

போலீஸ் ஏற்கெனவே காத்திருந்தது. அவர்களுடன் மயானத்துள் புகுந்தார்.

முந்திய இரவில் தெரிந்த அந்தப் பிரமைகள் பகலில் அங்கு தெரியாமல் மறைந்தன. எல்லாம் சப்பென்று இருந்தன. சமாதிகளும் சரி, இடுகாட்டு மரங்களும் சரி.

முந்திய நாள் எரிந்த பிரேதத்தின் சாம்பலை அள்ள சொந்தக்காரர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் வேண்டுகோள் விடுத்து ஆட்களை எண்ணினார் சிங்.

பிறகு அவர்தன் காரியம் முடியும் வரை அவர்களோடு இருக்க இரண்டு பேர்களை நியமித்தார். சைக்கிள் ஆசாமி இவர்களோடு கலந்து வெளியே போய்விடக்கூடாது என்பதற்காக.

தமது சிறு குழுவோடு சிங் ஒவ்வொரு சமாதியாகச் சென்றார். அவற்றின் கட்டிடங்கள் மீது ஒரு கம்பால் தட்டிப் பார்த்தார். இப்படி ஒவ்வொரு சமாதியிலும் அவர்கள் கம்பினால் தட்டினார்கள்.

சமாதிக்குள் சுரங்கம் கட்டி உள்ளே கொள்ளைக் கும்பல் பொக்கிஷத்தை மறைத்து வைத்து இருக்கலாம் என்று அவருக்கு யூகம்.

பதினொரு மணிக்குள் எல்லா சமாதிகளையும் தட்டிவிட்டார்கள். இறந்தவர்கள் உறங்குவது என்பது உண்மையானால், இப்பொழுது சத்தம் கேட்டு எழுந்து உட்கார்ந்திருப்பார்கள்.

சமாதிகள் மட்டுமல்ல, கீழே தரிசு பூமியில் எங்கேயாவது வெடிப்பு, பொந்து இருக்கிறதா, புதுமண் பூசப்பட்ட சுவடு தெரிகிறதா என்று அங்குலம் விடாமல் கவனித்தார்.

ஒரு மணிக்குள் அவரும் அவரது ஆட்களும் களைத்துவிட்டார்கள். சிங்கின் மனத்தில் ஆக்ரோஷம் எழுந்தது.

வாட்ச்மேன் திரும்பி வந்து தனது ஷெட்டில் உட்கார்ந்தான். ஆத்திரத்தில் அவனை அணுகினார். இப்பொழுது போதை எல்லாம் போய் தன்வசத்தில் இருந்தான் அவன்.

– வாட்ச்மேன்! என்னைத் தெரியுதா? என்றார்.

பழைய பேப்பரை படித்துக்கொண்டிருந்த வாட்ச்மேன்

தன்று பனியனை இழுத்துவிட்டுக் கொண்டு, கைகளைக் கூப்பினான்.

— சாரைத் தெரியலீங்களே? என்று குழைந்த வார்த்தைகளுடன் கூறினான்.

— ஓகோ! ராத்திரியானா குடிக்கவேண்டியது, மண்ணில் உருள வேண்டியது. மயானத்திலே ஒருத்தன் கொலை செஞ்சு பாடியைக் கொண்டு புதைச்சிக்கூடக் கேள்வி கேட்பார் கிடையாது; அப்படித்தானே?

கேள்வி ஒரு நீர்த் துளிபோல் அவன் முகத்தில் அடித்தது. உடம்பு இரண்டு அங்குலம் குறுகிவிட்டது. கும்பிடுபோட்ட கைகளை விலக்கவில்லை!

—சார் கோபிச்சுக்கப்படாது. எப்பவாவது குடிச்சுடுவேன்.

— எப்பவாவதா, அல்லது தினமுமா?

— கோபிச்சுக்க கூடாது. அவ்வளவிக்குப் பணம் கிடையாது என்கிட்டே. நான் புள்ளை குட்டிக்காரன்.

— மயானத்தில ராவுல யார் யார் வராங்க தெரியுமா?

— சார், எந்த மயானத்திற்கு வந்தாலும் இந்த மயானத்திற்கு வரமாட்டாங்க. இது அத்துவானத்தில இருக்கிற மயானம். ராத்திரி ஒன்பது மணிக்குப் பிணத்தைத் தூக்கிட்டு வரப் பயப்படுவாங்க. சாதாரண ஆள் இந்தப் பக்கம் வரமாட்டாங்க.

சிங்குக்கு அவன் சொன்னதின் உண்மை சற்றுப் புலப்பட்டது.

உண்மையில் அது அத்துவான மயானம்தான். மயானங்களுக்குரிய கோரம் இதில் அதிகமாயிருந்தது. வெறும் மரங்கள் கூட இங்கே பயங்கரத் தோற்றத்தில் நின்றன.

— சரி சொல்லு! சமீபத்தில் யாராவது வந்தாங்களா?

— யாரும் வரலீங்க சார்.

— திருட்டுக் கும்பல் ஒன்று இங்கே வர்றதாகக் கேள்விப்பட்டோம்?

— சார், நான் அறிஞ்சு ராவு பத்து மணிக்கு உள்ளார யாரும் வர்றதில்லே. அதுக்கு மேல்பட்டு வர்றாங்களோ என்னவோ? அப்படி வந்தாலும் எனக்குத் தெரிஞ்சு

போயிடுமே?

— எப்படித் தெரியும்?

— காலையில வந்ததுமே ஒரு ரவுண்டு அடிப்பேன் சார்! அத்தனை இடத்தையும் சுத்திப் பார்த்துடுவேன்.

— ஏன் அப்படிச் செய்யறே?

— நீங்க சொன்னீங்க பாருங்க. ராத்திரி யாராவது புதைச்சுட்டுப் போனா என்ன செய்யறதுன்னு. அப்படி யாராவது செய்திருக்காங்களான்னு பார்க்க சுத்தி வருவேன்.

— எப்படி அதைக் கண்டுபிடிப்பே? என்று வேண்டுமென்றே கேட்டார் சிங்.

— புதுமண்ணு வெளியில வந்திருக்குமே? யாருக்குத் தெரியாதா? தோண்டின இடத்தில புது மண்ணு வெளியிலே வந்துடுமே?

'பலே ஆள்' என்று தம் மனத்துள் சொல்லிக் கொண்டார் சிங்.

— சரி, எரிச்சுட்டா என்ன பண்ணுவே? என்றார் சிங் குதர்க்கமாக.

— சார், லேசிலே எரிக்க முடியுமா? பாரச்சு கன்னான் வறட்டி கொண்டு வந்தால் தான் எரிக்க முடியும். இல்லேன்னா இங்கே ஏது வறட்டி? சும்மா, வைக்கோல் போட்டு எரிக்க முடியுமா?

அவன் வாதங்கள் சரியாக இருந்தன.

— சரி இந்த சைக்கிள் யாரோடது என்று சொல்ல முடியுமா?

'மதுரா வெண்ணெய்' சைக்கிள் கொண்டு வரப்பட்டது. வாட்ச்மேன் அதை மேலும் கீழுமாகப் பார்த்தான்.

— யாருது தெரியலையே? என்றான்.

— நேத்து ராத்திரி, இங்கே ஒருத்தன் புகுந்து இதை வச்சிட்டுப் போயிருக்கான். யாருன்னு தெரியுமா?

— தெரியாதுங்களே? எனக்குப் பழக்கப்படாதவங்களா இருக்கணும்.

— இந்தப் பேரைப் பாரப்பா?

விளம்பரத் தகட்டைக் காட்டினார். பார்த்தான். நெருங்கி

வந்து பார்த்தான்.

— அப்படி யாரும் எனக்குத் தெரிஞ்சவங்க கிடையாதே? என்று பவ்யமாய் இழுத்தான்.

— சரி! இதைத் தேடிட்டுப் பின்னால் யாராவது வந்தா பக்கத்து போலீஸ் ஸ்டேஷன்லே வந்து சொல்லணும் தெரியுதா?

— தெரிஞ்சது.

— நீ போலீஸ்ல சொல்லப் போறது அவனுக்குத் தெரியக்கூடாது.

— சரிங்க.

சிங் திரும்பினார். அவர் மனம் தத்தளித்தது. தன்னுடைய மிகையான நம்பிக்கையால் ஆசாமியை நழுவவிட்டு விட்டோமோ என்று நினைத்தார். ஒரு பெருமூச்சுடன் ஜீப்பில் ஏறினார்.




அலுவலகம் வந்தபொழுது மாலை மணி மூன்று. லிங்க் காத்திருந்தான். — லிங்க்! அந்த சைக்கிளைக் கொண்டு வந்துட்டாங்களா?

— ஆச்சு ஸார்!

சிங் எழுந்து வந்தார். வெளியே சைக்கிள் நின்றது.

பழைய அட்லஸ்!

கைப்பிடி சிதைந்திருந்தது. ஸ்போக்ஸ்களில் துரு வைத்திருந்தது. சீட் அழுக்காயிருந்தது.

மதுரா வெண்ணெய் விளம்பரத்தைப் பார்த்ததும் சற்றுத் தயங்கினார். தகரத்தை அசைத்தார். முன்னும் பின்னும் இழுத்துப் பார்த்தார்.

ஒரு விஷயம் தெரிந்தது. தகரப் பலகை சமீபத்தில்தான் தொங்கவிடப்பட்டிருக்கிறது. ஏனெனில் அதன் பெயின்ட் பிய்யவில்லை. பழைய கறுப்பு நிறம் இன்னும் அதே நிலையில் இருந்தது.

— லிங்க்! என்றார்.

— எஸ் ஸார்!

— இந்தப் போர்டைக் கழட்டு.

— சரி சார்.

— முதல்ல இதே மாதிரி ஒரு வெண்ணெய்க் கடை இருக்கிறதா என்று விசாரிக்கணும்.

— சரி சார்.

— எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் செய்தி அனுப்பு.

— எஸ். ஸார்!

அடுத்த 24 மணி நேரமும் சிங் போன் அடியில் உட்கார்ந்திருந்தார். ஒவ்வொரு நிலையத்தையும் ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தார். சில நிலையங்களை வற்புறுத்திக் கொண்டிருந்தார். சிலவற்றைத் தூண்டிக் கொண்டிருந்தார்.

பிரயோஜனம் எதுவும் இல்லை. அந்தப் பெயரில் யாரும் வெண்ணெய்க் கடை வைக்கவில்லை. அந்தச் செய்தி வந்ததும் மீண்டும் அதே தகர விளம்பரத்தைப் பார்த்தார். எழுத்துக்களில் புதுப் பெயின்ட் வாடை இன்னும் இருந்தது. சமீபத்தில்தான் இந்தப் பெயர்ப் பலகைக்கு யாரோ வர்ணம் பூசியிருக்கிறார்கள்.

வர்ணம் அடித்தவர்களைத் தேடலாமா? முடிகிற காரியமா அது?

சிங் பரபரத்தார். ஒவ்வொரு நாள் வீணாவதும் அவருக்கு வேதனையளித்தது.

மாலை நான்கு மணிக்கு மியூசிக் டீச்சர் வீட்டுக்குப் போனார். ஜிப்பா, கண்ணாடி போட்டுக்கொண்டு அந்த மாடியில் நுழைந்தார்.

முதலில் திகைத்த டீச்சர், பிறகு புரிந்துகொண்டு வரவேற்றாள்.

சிங் மேலே போனார்.

டெலஸ்கோப்பில் கண்களைப் பொருத்தினார். எதிர் வீட்டு ஹாலைப் பார்த்தார்.

ஜோதிகா ஒரு இளம் சிவப்பு பாலியஸ்டரில் புதைந்திருந்தாள். உடல் வளைவுகள் அவளது சாரியோடு இழைந்து மென்மையாக வெளித் தெரிந்தன.

இடுப்பு இன்னும் கருக்கத்தை விடவில்லை. பார்வையில் முன்னைவிடத் துளி கம்பீரம் ஒளி அடித்தது. சோபாவில்

சாய்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சாய்வில் அலட்சியம், பெருமை இரண்டும் இருந்தன.

தனி அறையில் இருந்தால் கூட யாருடைய பார்வையோ முன்னால் இருப்பது போல வேண்டுமென்றே ஒரு ஒயிலை ஏற்படுத்தியிருந்தாள்.

ஒவ்வொரு பக்கமாக வாசித்துத் திருப்பும் வரை சிங் பொறுமையாகப் பார்க்க வேண்டியிருந்தது. எவ்வளவு நேரம் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருப்பது?

நிச்சயம் சிங்கும் அவரது ஆட்களும் ஒரு கஷ்டமான வேலையைத் தான் செய்து வருகிறார்கள். தெருவில் ஒருவரைக் கண்காணித்தாலும் அடிக்கடி தெருக்காட்சியைத் திரும்பிப் பார்த்து, அறுவையின் அலுப்பைச் சற்று சமாளித்துக் கொள்ளலாம். இப்படி அறையில் அடைபட்டுக் கிடந்தால்.....

ஆறே காலுக்குத் தான் ஜோதிகா அசைந்தாள். அதுவரை சிங்குக்கு செமை அறுவை! அவள் எழுந்து இடதுபுறம் அறைக்குப் போனாள். அதே கண்ணாடி முன் சற்று நேரம் நின்றாள். பிறகு சுற்றும் முற்றும் பார்த்தாள். சாரியை அவிழ்த்தாள். அசல் பவுன் போல் மின்னினாள்.

என்ன உடம்பு!

எத்தனை மென்மை வளைவுகள்!

எத்தனை மெல்லிய நெளிவுகள்!

மழுமழுப்பில் ஆஸ்கர் பொம்மைதான்.

முந்திய முறை போல கட்டிலில் படுத்தாள். இரண்டு துண்டுத் துணிதான். மேலே மார்புக்கு ஒன்று, கீழே மர்மத்திற்கு ஒன்று. அகலமோ நீளமோ மூன்று அங்குலத்திற்கு மேல் எங்கேயும் போகவில்லை.

முதலில் குப்புறப் படுத்தாள்.

சிங் உதட்டைக் கடித்தார்.

ஐ-பீஸில் வைத்த கை நடுங்கியது.

மெத்தை மீது கைகளை வைத்து துழாவினாள். ஒரு புருஷனைத் துழாவுவது போல் இருந்தது. கால்களும் துவைத்தன. ஏதோ கடல் நீரில் நீந்துவது போல் பிரமை கொடுத்தாள்.



இரண்டு நிமிடம் இதே செயல்!

பிறகு நிமிர்ந்தாள்.

சிறிது இளைப்பது போல இருந்தது.

பிறகு மெதுவாகக் கையைக் கீழே போகவிட்டாள்.

ஜட்டியின் நுனிகளை இருவிரல்களால் கவ்வினாள். மெள்ள, மெள்ள அதைக் கீழே தள்ளினாள்.

சிங்கின் கண் மீண்டும் பதறியது. அவர் மூச்சு அநேகமாக நின்றது. கண்கள் விரைந்துப் பார்த்தன. அவள் தன் இரு கால் விரல்களால் மிருதுவாக அந்தாக்கத்தை நீவி விட்டாள். அதற்கு இணையாகக் கால்களைச் சற்று அகலப்படுத்திக் கொண்டாள்.

திடீர் என்று அவள் திரும்பி ஏதோ சொல்வது போல இருந்தது.

யாரோ வந்திருக்கிறார்கள் போலும்!

அவசரமாக எழுந்தாள். சாரியை அரை நிமிடத்தில் உடுத்தினாள். ஹாலுக்கு வந்து வாசலை நோக்கி ஓடினாள். ஒரு டிப்டாப் ஆசாமி உள்ளே நுழைந்திருந்தான். சிங் இப்போது தமது டெலஸ்கோப்பை ஹாலை நோக்கித் திருப்பியிருந்தார். அவளும், புது ஆளும் சிறிது நேரம் பேசினார்கள். பிறகு அவனைக் காத்திருக்க வைத்து ஜோதிகா படுக்கை அறைக்குள் நுழைந்தாள்.

சிங் டெலஸ்கோப்பைத் திருப்பினார்.

மேசை மீது விளக்கைப் போட்டாள். டிராயரைத் திறந்து காகித நோட்டை எடுத்தாள். ஒரு காகிதத்தை உருவி அதில் எழுத ஆரம்பித்தாள். யோசித்து யோசித்து எழுதினாள். ஒவ்வொரு வார்த்தைக்கும் யோசித்தாள். என்ன அப்படி எழுதுகிறாள்? ஒவ்வொரு வார்த்தைக்கும் நேரம் எடுத்துக்கொண்டு?

சிங் டெலஸ்கோப்பைச் சரித்துப் பார்த்தார்

அவள் எழுதும் காகிதம் சமதளமாகத் தெரிந்தது.

பதினைந்து நிமிடம் ஆயிற்று. அவள் எழுதுவ நிறுத்தினாள். திரும்ப ஒவ்வொரு வார்த்தையாகப் பார்த் சரிதானா என்று ஒப்புநோக்குவது தெரிந்தது. கடைசியி

கடிதத்தை எடுத்து ஒரு கவரில் போட்டு, பாட்டில் பசை எடுத்து மூடினாள். பிறகு மெழுகுவர்த்தியை ஏற்றி ஏதோ செய்ய, அது சீல் வைக்கும் சடங்கு என்று புரிந்து கொண்டார்.

உடன் சிங் அதை வயர்லெஸைத் திறந்தார்.

## 13

—ஸி.ஜி 32 பேசறேன்! ஆள் வெளியேறுகிறான் ரெடி! ராஜர்! என்றார். பிறகு டி-ஷர்ட்டைப் பார்த்தார்.

ஜோதிகா அந்தக் கவரை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள். டி-ஷர்ட் ஆசாமி எழுந்தான். கவரை எதிரே நீட்டி அவள் எச்சரிக்கை செய்து பேசினாள்.

அவன் அதைப் பெற்றுக்கொண்டான். தனது பேண்ட் பையில் கவரைத் திணிக்கப் போனான். அவள் உடனே அவனை நோக்கி திட்டுவது போல் பேசினாள்.

அவன் குனிந்து கொண்டு, தனது கைப்பையை எடுத்து ஜிப்பைப் பிரித்தான். அதனுள் கவரை வைத்தான். ஜிப்பை மூடினான்.

அவள் அவனுக்கு மேலும் உபதேசம் செய்தாள். பிறகு முன்பு போல் அவள் பால்கனி நோக்கி வந்தாள். தெருவைப் பார்த்தாள். பிறகு உள்ளே போய் அவனை அனுப்பி வைத்தாள்.

சிங் ஒரு கணம் டி-ஷர்ட்டைப் பார்த்தார். அதே கணம் வயர்லெஸை எடுத்தார்.

— ஸி.ஜி. 32 பேசறேன். எம் 28 உடனே பேசுங்க! ராஜர்!

— எம் 28 ராஜர்!

— அபார்ட்மெண்டுக்குக் கீழே மாடிப்படி வழியே ஒரு டி-ஷர்ட்டுக்காரன் இறங்குறான். கைப்பை ஒன்று வச்சிருக்கான். ஆளை உடனே பின்பற்றணும் ராஜர்!

— எம் 28 பேசறோம். குறிச்சுக்கிட்டோம் ராஜர்.

— ஆளைப் பின்பற்றிக்கிட்டுப் போங்க.

— பிடிச்சுடவா சார்?

— வேண்டாம். இந்தக் கட்டத்திலே செய்யக்கூடாது.

— வேறே என்ன செய்யணும்?

— ஒரு தந்திர வேலை செய்யணும்! அவன் கைப்பையைப்



பிடுங்கிடணும்.

— செஞ்சிடறோம்.

— யாரோ வழிப்பறிக்காரங்க செஞ்ச மாதிரி தோற்றம் கொடுக்கணும்.

— "செஞ்சுடறோம்."

— ஆளை பார்த்துக்குங்க.

சிங் நிறுத்திவிட்டு மறுபடி ஜன்னலை நோக்கி ஓடினார். கீழே ஆவலோடு பார்த்தார்.

இருட்டு படர்ந்திருந்தது. எதிர்வரிசைகளில் நிழல் விழுந்திருந்தது. கண்களைச் சிரமப்படுத்தினார். வாசலை பார்க்க சில நிமிடங்களுக்குப் பிறகுதான் அந்த ஆசாமி தட்டுப்பட்டான்.

அதுவும் அவன் நிழலோடு நிழல் பகுதியில் நிற்க அவனைக் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருந்தது.

செய்திப் பரப்பை முடித்துக் கொண்ட பிறகு, சிங் யோசித்தார். ஆளைப் பிடிக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அது சரியா? சில தர்மசங்கட சமயங்களில் இது போல அவசரத் தீர்மானம் எடுக்க வேண்டியிருக்கிறது.

— அதை எடுத்துவிட்டார். காரணம் இருந்தது. சிங் அதை என்றும் வழிப்பறியாகத் தோற்றுவிக்க நினைத்தார்.

ரகசியப் போலீசின் நடவடிக்கை என்று தெரிந்தால் எதிரிகள் இன்னும் உஷாராகிவிடுவார்களே?

மேலும் இந்த டி-ஷர்ட் நபரிடம் கோவில் நகைகள் இருக்குமிடத்தின் செய்தி இருக்கிறதோ என்னவோ?

இல்லையென்று வைத்துக்கொள்வோம். இந்த டி-ஷர்ட் மனிதனைப் பிடித்து கடத்திவிட்டால் எதிரிகள் உடனே புரிந்து கொள்வார்கள். ரகசியப் போலீசார் நகைகளைத் தேடுகிறார்கள் என்று!

அதனால்தான் வெறும் வழிப்பறிபோல் நடித்துக் கைப்பையை மட்டும் பிடுங்கச் சொன்னது.

எம்.28 தனது போகும் இடங்களைக் கூறிக் கொண்டே போனான்.

அந்த டி-ஷர்ட்காரனை இரண்டு மப்டி போலீஸ்

சைக்கிளில் கடந்து போய்விட்டார்கள். பையைப் பிடுங்கத் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிங் சோபாவில் மெதுவாகச் சாய்ந்தார். ஆரம்பப் பரபரப்பு இப்போது குறைந்திருந்தது.

மனக் கண்முன் டீ-ஷர்ட் சைக்கிளில் போவதையும், போலீஸ் ஆட்கள் அவனைக் கடந்து முன்னால் போயிருப்பதையும் கற்பனை செய்தார்.

ஒரு நிமிடம் ஓடியது. திரும்பவும் எம்.28 தனது இடத்தைக் குறிப்பிட்டது.

அடுத்து சில விநாடிகள் மௌனம். பிறகு எம்.28 பரபரப்புடன் பேசியது.

— ஹலோ! ஸி.ஜி 32 வெற்றி! வெற்றி! அந்த ஆசாமியோட கைப்பையைப் பறித்தாச்சு! நம்ம ஆட்கள் அவனை நிறுத்தி வாட்சைக் கழற்று! பைக்குள்ளே எவ்வளவு பணம் வச்சிருக்கிறே?ன்னு கேட்டபோது ஆசாமி பயந்து போய் பையைக் கடாசிட்டு ஓடிட்டான். பை இப்போ பத்திரமாக நம்மகிட்டே இருக்கு! சாஜர்!

— ஸி.ஜி. 32 பேசறோம்! வெரிகுட்! நன்றி! ஆளுங்க போஸ்டுக்குத் திரும்பிவிடலாம் ரஜர்!

சிங்குக்குத் திருப்தி ஏற்பட்டது. கையை எடுத்து முகவாயை வருடினார். ஒரு முறுவல் மென்மையாக வந்தது.

சிறிது நேரத்தில் டெலஸ்கோப்பை மற்றவர்களிடம் ஒப்படைத்து அந்த மாடியை விட்டு விலகி ஆபீஸ் வந்தார்.




விளக்குகளைப் போட்டு உடம்பைச் சற்றுத் தளர்த்திவிட்டார். கண் சிறிது சுகத்தோடு மூடியது. சில விநாடிகள்தான் இந்த அமைதி நீடித்தது.

சட்டென்று நிமிர்ந்தார். மனத்தை நெருடியது.

அந்த ஓய்வு பொய்யானது என்று நினைத்தார். என்னவோ ஏதோ சரியாக நடக்கவில்லை? அது அவரது யூகம்தான்.

ஆருடம் போல இந்த விசித்திர ஊகங்கள் அவர் மனத்தில் திடீர் திடீரென்று தோற்று எடுக்கும்.

காற்றைக் கூர்ந்து கவனித்தார். எங்கேயோ அரவம் கேட்டது. பூனையாக இருக்குமோ? ஓ போலீஸ் வேனா?

ஓகோ! பார்ட்டி திரும்பி வருகிறதா?

நினைத்தது உண்மை. நிறையத் தூம்பு தூசியுடன் வேன் வந்து நின்றது. அதிலிருந்து எம் 28 பார்ட்டியின் இரண்டாவது தலைவர் சுந்தரம் வெற்றி நடையுடன் உள்ளே வந்து கொண்டிருந்தார்.

கையில் துணியால் மூடப்பட்ட வஸ்து!

இருபக்கமும் வாட்டசாட்ட துணை ஆட்கள் காவல்!

நெற்றி ஓரம் வியர்வை சிணுங்க சற்றுச் சோர்ந்து போன கண்களுடன் இன்ஸ்பெக்டர் சிங் முன்னால் நின்று படீரென்று சல்யூட் ஒன்று வைத்தார்.

அந்தக் கைப்பையைக் கோயில் நைவேத்தியம் போல் சிங் முன் சமர்ப்பித்தார்.

சிங் முகத்தில் ஒரு புன்னகை பறண்டு வந்தது.

— ஆள் என்னாச்சி?

— ஓடிட்டான். ஓடவிட்டுட்டோம்! உங்கள் உத்தரவு!

சிங் பையை வாங்கினார். டெலஸ்கோப்பில் பார்த்த அதே பை தான்! சுற்றிலும் பார்த்தார். ஸிப்பை இழுத்தார்.

உள்ளே அழுக்கான துண்டும், பனியனும் இருந்தன. கப்பென்று ஒரு வாடை அடித்தது. இரண்டு, மூன்று தினசரிப் பேப்பர்களும் இருந்தன. சிகரெட், தீப்பெட்டி, சோப்பு வகையறா கொஞ்சம். கடைசியில் அந்தக் கவர்.

சிங் அதை ஆவலோடு எடுத்தார்.

வெளிச்சத்தில் பலமுறை உற்று நோக்கினார். பிறகு கத்திரிக்கோல் எடுத்து ஒரு ஓரமாகக் கத்தரித்தார்.

கனத்த கவர்!

உள்ளே பொருள் அடக்கத்தை உருவினார். பருமனாகியிருந்தது. பிரசவித்ததும் கவர் ஒரு கர்ப்பம் போல் சூம்பிவிட்டது.

பருமனை மேசையில் பரப்பினார். அது இரண்டாகப் பிளக்க நடுவிலிருந்து ஒரு கடிதம் தனியே வந்தது. அதில் எழுதியிருந்த

–அன்புள்ள டி.எஸ்.என். பழைய முயற்சிகள் வெற்றி இல்லை. ஆனாலும் பரவாயில்லை. இந்த இடத்தை அவசியம் அடையாளம் முதலில் கிடைத்தால் தெரியப்படுத்தவும்.

இணைப்பு – 1

தங்கள்

ஜோ:....

கையெழுத்தில் 'ஜோ' வென்ற எழுத்து மட்டுமே தெரிந்தது. மீதி எழுத்துக்கள் சரியா தெரியவில்லை.

–சரி, நீங்க கொஞ்சம் ஓய்வெடுங்க! என்று போலீசாரை வெளியே அனுப்பினார்.

கடிதத்தை படித்துவிட்டுப் பருமனை எடுத்து மெல்லச் சுருள் பிரித்தார். தின காகிதத்தில் ஒரு வரைபடம் கண்டதும் சிங்கின் கண்கள் பளபளத்தன. மேஜையில் பிரித்து நான்கு மூலைகளுக்கும் கனம் வைத்தார். ஒரு சீர் பார்வையை அதன்மீது இறக்கினார்.

நெல்லூர்ச் சாலை என்பதைப் பார்த்ததும் அவர் மனம் பறந்தது. அதில் புதுக்குடி குறிக்கப்பட்டிருந்தது. அதனருகில் காளி கோயில் குறிக்கப்பட்டு, கோயிலுக்கு இருபதடி நிலத்தில் ஒரு பெருக்கல் குறி போடப்பட்டிருந்தது.

வரைபடத்தை மனத்துக்குள் பலமுறை வாசித்ததும் சிங் காகிதத்தை மூடினார்.

–ஜீப் ரெடியா? என்று வினவினார்.

–ரெடி! என்று பல குரல்கள்.

இரண்டு ஜீப்கள் புறப்பட்டன. நெல்லூர்ச் சாலையைப் பிடிக்க 40 நிமிடங்கள் ஆயின. அன்று புதுக்குடியை இருட்டில் தேடுவது கடவுளைத் தேடுவது போல! ஊரின் வடபுறத்தில் காளி கோயில் தனியாக இருந்தது. அச்சமான இடம். அதற்கு அப்பால் மயானம்.

கோயிலைச் சுற்றி வந்தார். ஓர் அறைக்கோயில் அது. கம்பி போட்ட கதவு உள்ளே உக்கிரத்தில் ஒரு உருவம் சிங்கையும், அவர் ஆட்களையும் பார்த்தது! முட்டையான கண்கள் அந்த இருட்டிலும் மினுமினு காட்டின.

நாட்டுப்புறத்தில் இருட்டு ஒரு பசைபோல் ஒட்டுகிறது.



ஆட்கள் எல்லோரும் அங்கு இருட்டில் கரைந்து மறைந்தார்கள். சிங் கோயிலின் முகப்பிலும் இருபதடி தூரத்திலும் நடந்து தரையைப் பரிசோதித்தார்.

அரிய கட்டாந்தரை! தண்ணீர்ப் பார்த்து காலம் ஆகியிருக்கும்.

– மணிகண்டன் என்று அழைத்தார்.

– சார் என்று இருட்டு பேசுவது போல் ஒரு குரல் பேசியது.

– சாத்திரி வெட்ட வேணாம்? காலையிலே பார்த்துக்கலாம். ஒரு பாரா போட்டுட்டு கிளம்பிடலாம்.

– எஸ் ஸார்!

– ஆள் நடமாட்டம் தெரிஞ்சா உடனே தெரியப்படுத்தச் சொல்லுங்க.

– எஸ் சார்!

உத்தரவு முடித்துவிட்டு எனினும் சிங் அங்கே தயங்கி நின்றார். பிரதேச அமைப்பை இருட்டில் பார்க்க முயன்றார். பசச் செழிப்பு எதுவும் இல்லை. இடம் அநேகமாக மொட்டையாக இருந்தது. அவர் மனத்தில் ஏதோ நெருடியது. அதை ஊகிக்க முடியவில்லை. திரும்பத் திரும்ப வெறுமையைப் பார்த்தார். பிறகு ஜீப்பை நோக்கி நடந்தார்.

## 15

காலை ஆறு மணிக்குத் தோண்ட ஆரம்பித்து சிங்குக்குச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. எட்டு அடி, பத்து அடி, பன்னிரண்டு அடி. ஆழம் தோண்டிக்கொண்டு போனார்கள் போலீஸ் ஆட்கள். பதினைந்து அடி வந்தபோது தண்ணீர் பீய்ச்சிக் கொண்டு வந்துவிட்டது.

சிங் வயர்லஸ்ஸில் தெரிவித்தார். – இன்னும் தள்ளி ஓரிடத்தில் வெட்டுங்கள்.

பத்து மணிக்கு சிங் புதுக்குடிக்குப் போனார். காளி கோயில் மூடிக்கிடந்தது. சரியான கட்டாந்தரையில் போலீஸ் ஆட்கள் வெட்டிக் கொண்டிருந்தார்கள். இரண்டாவது குழி ஆறடி இறங்கியிருந்தது.

சிங் அதை அணுகினார். உள்ளே குனிந்து பார்த்தார். பார்த்தவர் அப்படியே ஒரு நிமிடம் நின்றார். ஆட்கள்

கடப்பாறையோடு உறைந்தார்கள்.

— மணிகண்டன்

— எஸ் சார்!

— வேலையை நிறுத்திடுங்க

சிங் வரைபடத்தை வரவழைத்துக் குறிப்பிட்டின் அளவுகளைப் பார்த்தார். இரண்டு குழிகளும் எங்கே தோண்டப்பட்டிருக்கின்றன என்பதையும் பார்த்தார். மனசில் பக பக என்று ஒரு உணர்வு எரியது. உடம்பு பூராவும் அது அரித்துக் கொண்டு ஓடியது.

மணிகண்டன் அவர் முகத்தை நோக்கினார்.

— போதும் மணி. எல்லாரையும் நிறுத்தச் சொல்லுங்க. நிலையத்திற்குத் திரும்பிடலாம்.

சிங் ஜீப்பில் ஏறினார். மனசு சரியில்லை.

ஆபீஸில் இறங்கினார்.

லிங்க் அப்போது அங்கு வந்திருந்தான். காலையில் டெலஸ்கோப் வேலை பார்த்துவிட்டு வந்திருந்தான்.

— லிங்க் என்றார்.

துள்ளி வந்தான்.

— ஜீப்பிலே ஏறு!

ஏறினான்.

— நேரே டீச்சர் வீட்டுக்குப் போ என்றார் டிரைவரிடம்.

— லிங்க்! உண்மையைச் சொல். ஒவ்வொரு மாலையிலும் நீ அந்த டெலஸ்கோப் வழியா என்ன பார்த்தே?

திடுக்கிட்டான் லிங்க்!

— ஜோதிகாவைக் கவனிச்சேன் ஸார்!

— ஜோதிகா அப்போ என்ன செஞ்சா?

லிங்க் பேசவில்லை.

— சொல்லு. லிங்க்!

— விரசமா நடந்துகிட்டா!



— அதைத்தானே கவனிச்சே?

— ஆமாம். நம்ப ஃபோகஸ் அவள் மேலே தான் சார்

— அது இருக்கட்டும். ஒவ்வொரு மாலை எடுக்கும் நீதான் பேசனே? நீ அவள் ஜட்டியைக் கழட்டுவதை பார்க்கத்தானே?

— சார், என் கடமையைச் செய்யும்போது அந்தக் காட்சி எனக்கு இலவசமா கிடைக்குது ஸார்!

— அங்கேதான் ஏமாந்தோம்! என்றார் சிங் அழுத்தமாக.

— என்ன? என்று திடுக்கிட்டுக் கேட்டான் லிங்க்.

— சிங் அதற்குள் யோசனையில் மூழ்கினார்.

— நான் ரெண்டு நாள் பார்த்தேன். ரெண்டு நாளும் விரசம் காண்பிச்சா. தெரிஞ்சுதா?

லிங்க் மௌனமானான். குற்ற உணர்வோடு சிங்கைப் பார்த்தான்.

— அந்த விரசம் ஏதோ தனக்காக செய்யறதா தெரியலை. மற்றவங்களுக்காக காபரே பொண்ணுங்க செய்வாங்களே. அதைப் போல செய்யறா.

— மற்றவங்க யாரு ஸார்?

— சொல்றேன். அப்புறம் யாராவது ஒருத்தர்கிட்டே செய்தி அனுப்புகிற காரியம் செய்யறா! இல்லையா?

— ஆமாம் ஸார்.

— நாம்ப ரொம்ப தீவிரமா அந்த ஆளைப் பின்பற்றிப் போறோம். கடைசியிலே ஏமாறுறோம்

லிங்க் நெற்றி வியர்த்தது.

அவனுள்ளே ஒரு பெரிய பயங்கர எதிர்பார்ப்பு உண்டாகிக் கொண்டிருந்தது.

— இதனாலே ஒரு அனுமானத்திற்கு நான் வந்திருக்கேன்! இன்னிக்கு உறுதிபடுத்திச் சொல்றேன்.

ஜீப் வழக்கப்படி இரண்டு, மூன்று தெரு தள்ளி நின்றது. சிங் வேட்டி உடுத்தினார். கண்ணாடி போட்டார். லிங்க் ஒரு பொய் மீசை வைத்து வேறு விதமாகத் தலையை வாரினான். நெற்றியில் விபூதி தரித்தான்.

இருவரும் டீச்சர் வீட்டுக்குச் சென்றார்கள். டீச்சர் வழக்கம்போல் வரவேற்றாள்.

சிங் மாடி ஏறி டெலஸ்கோப் அருகில் போய்க் கண்களைப் பொருத்தினார்.

ஜோதிகா தனது ஹால் சோபாவில் அமர்ந்திருந்தாள். தனியாக உட்கார்ந்து ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது மாலை இறங்கிக்கொண்டிருந்த நேரம்.

சிங் ஜோதிகாவை நழுவாமல் கவனித்துக் கொண்டிருந்தார். ஜோதிகா படிப்பிலே இருந்தாள். பிறகு சட்டென்று பார்வையை வேறு புறம் திருப்பினாள்.

சில கணங்கள் அதே நிலையில் இருந்துவிட்டு புத்தகத்தை தள்ளிவைத்தாள்.

விளையாட்டாக எழுந்து அடுத்த அறைக்குப் போனாள். ஸாரியைக் களைய ஆரம்பித்தாள். இரண்டு பீஸ் உடையில் கட்டில் மீது ஏறினாள்.

— ஆ! பழையபடி காபரே வேலை காண்பிக்கிறியா? லிங்க்! இலவச காபரே நிறைய காண்பிக்கிறாள் என்றார் சிங்.

— அதே தானே! அழிக்கிற வேலையா ஸார்?

— ஆமாம்...... கொஞ்சம் இரு.

லிங்க் மௌனமானான்.

— லிங்க்! இவள் ஏமாற்றுவது தெரியாம நாம பாட்டு 'ஜோ, ஜோ, ஜோதிகா'ன்னு பாடிட்டு இருக்கோம்.

— அதென்ன 'ஜோ, ஜோ' ஸார்?

— தெலுங்கிலே தாலாட்டுப்பாட்டிலே 'ஜோ ஜோ'ன்னு வரும். நாமும் அவள் வெறுமை உடம்பைப் பார்த்து மகிழ்ந்து போய் 'ஜோ ஜோ ஜோதிகா'ன்னு வெறும் தாலாட்டிலே இருக்கோம். காரியத்திலே இறங்கலே இல்லை.

லிங்க பேசாமல் இருந்தான்.

திடீரென்று சிங்,

— லிங்க், கீழே டெலஸ்கோப்-டர்னிங் வீலைத் திருப்பு! என்றார் சிங். லிங்க் பலம் உபயோகித்துத் திருப்பினான்.

சிங் டெலஸ்கோப் முனையை மாற்றினார்.

அதன் பார்வையை வழக்கமான எதிர்வீட்டு ஹால் அறையைவிட்டு, அதன் ஜன்னல்கள் மீது திருப்பினார்.

கண்ணாடி ஜன்னல்கள் ஆறு. உள்ளே திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ஜன்னலை ஒவ்வொன்றாக அங்குலமாகப் பார்த்து வந்தார். கஷ்டமாக இருந்தால் டெலஸ்கோப் ஸ்டாண்டை நகர்த்தி வைத்தார். ஒரு ஜன்னல் முடிந்ததும் மற்றொரு ஜன்னல். மூன்றாவது ஜன்னல் வந்தபோது சட்டென்று ஆள் உறைந்துவிட்டார். லிங்க் அவரைக் கவனித்தான். அவரது கண்கள் அசைவற்றது.

— லிங்க்! என்றார். — இதைப் பாரு!

லிங்க் பார்த்தான். டெலஸ்கோப் வழியே எதிர் அப்பார்ட்மெண்டின் ஜன்னல் தெரிந்தது. திரைகள் தெரிந்தன. திரைகளுக்கு இடையில் மறைந்தும் மறையாமலும், ஆனா, ஒரு கண்ணாடி பளபளத்தது. என்ன கண்ணாடி! அதுவும் ஒரு டெலஸ்கோப் லென்ஸா?

லிங்க் பதறித் சிங்கைப் பார்த்துத் திரும்பினான். — ஸார், அது டெலஸ்கோப்பா?

— ஆமாம். வேறு என்ன? நீ அவர்களைக் கவனிக்கிறே. அவள் உன்னைக் கவனிக்கிறாள். அவக்கிட்டேயும் டெலஸ்கோப் இருக்கு.

— அப்போ அவங்க நம்மைக் கண்டுபிடிச்சிருப்பாங்களா?

ஆமாம் கண்டுபிடிச்சாச்சு போதுமா? அதனால் தான் நாடகமாடறா. தெரிஞ்சுதா?

லிங்க் திடுக்கிட்டான். சிங் தொடர்ந்தார்.

— அதாவது நமக்கு அங்கிருந்து செக்ஸ் சேஷ்டைகள் செய்து நம் கவனத்தைக் கவர்ந்துக்கிறா. ஆனா அதே நேரம் அந்த அப்பார்ட்மெண்டிலேயே வேற காரியம் நடக்குது?

— ஆச்சரியமாக இருக்கே! என்றான் லிங்க்.

— இன்னொன்று சொல்றேன். இப்போ பார்க்கிறியே இவ ஜோதிகா இல்லை! அவள் டூப்!

லிங்கின் வாய் சட்டென்று பிளந்தது.

— காலையிலே யோகா பண்ணினாளே அவள் தான் நிஜ ஜோதிகா. மாலையில் இருக்கிறவள் நம் கவனத்தை இழுத்து வேறு திசையிலே திருப்பத்தான்.

— நாம்ப இங்கே இருக்கோம்னு எப்படிக் கண்டுபிடிச்சாங்க?

– நம்மைப் போல அவுங்களுக்கும் ஞானம் உண்டுயில்லையா? யூகம் பண்ணியிருப்பாங்க.

– நீங்க எப்படிக் கண்டுபிடிச்சீங்க?

– நேத்து நம்ப ஆளுங்க அந்த டீ-ஷர்ட் ஆசாமியை விரட்டின போது எப்போ அவன் கைப்பையைத் தூக்கிப் போட்டு ஓடிப்போனானோ அப்பவே சந்தேகம் வந்திடுச்சு! அப்புறம் அவன் நம்மை தப்பான திசையிலே திருப்பி விட்றான்னு தெரிஞ்சதும் அதிசேர்ந்து படிப்படியா யூகிச்சுட்டேன்!

– சார், அப்ப நம்ப டெலஸ்கோப் நுனி அவர்களுக்குத் தெரியுமா?

– ஏன் தெரியாது? நாமும் இடைவெளி விட்டுத்தானே வெச்சிருக்கோம்! நம்ப டெலஸ்கோப் லென்ஸ் போர்ஷன் அவர்களுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்கும்!

– மூடிவிட்டுமா?

– ஐயோ! இப்போ வேண்டாம். முதல்ல என்கிட்டே பைனாகுலர்ஸை கொடு! டெலஸ்கோப்பை நீ பார்த்துக்க.

பைனாகுலர்ஸை எடுத்துக் கொண்டு சிங் ஒரு ஜன்னலின் அருகில் போனார். இயற்கையாகத் திரையில் விழுந்திருக்கும் ஒரு இடைவெளியைத் தேடினார். கண்டுபிடிக்க முடிந்தது. மறைவாக நின்று பைனாகுலரைப் பார்த்தார். கீழே அந்தக் கட்டடத்தின் வாசலைத் தீவிரமாகப் பார்த்தார். இடையே மேலே அபார்ட்மெண்ட் எல்லாப் பகுதிகளிலும் அலசினார்.

அன்று ஏதோ நடக்கிறது என்பது ஊர்ஜிதமாகி விட்டது. இல்லாவிடில் இந்த செக்ஸ் காட்சிகள் நடைபெற்றுயிராது. ஒரிஜினல் ஜோதிகா எங்கே? அவள் என்ன செய்கிறாள்?

சிங் அபார்ட்மெண்டைச் சுற்றி வளைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். செக்ஸ் காட்சி படுக்கையறையில் நடந்து கொண்டிருந்தது. அது தன்னை துப்பறிகிறவர்களை ஏமாற்ற அவள் நடத்துகிறாள். அது நடப்பது இடது புற அறை. வலது புற அறையையும் ஹாலையும் நன்கு கவனிக்க வேண்டும்.

பொறுமையுடன் பார்த்திருந்தார்.

மெள்ள மெள்ள மாலை மங்கிக் கொண்டிருந்த நேரம் ஹால் இருட்டாக ஆரம்பித்திருந்தது. லிங்கை விசாரித்த போது படுக்கை அறையில் விளக்கைப் போட்டு விட்டதாகத் தெரிவித்தான். இன்னும் செக்ஸ் தொடர்ந்து கொண்டு உடம்பின் முக்கிய உறுப்புகளில் அவன் விளையாடிக் கொண்டிருந்தான்.

பதினைந்து நிமிடம் சென்றது. ஹாலில் சலனம் தெரிய, சிங் எச்சரிக்கையுடன் பார்த்தார். இருட்டிலும் அவர் கண்கள் துழாவின. ஸாரி உடுத்தி யாரோ குறுக்கே போவதை அரைக் கணத்தில் உணர்ந்தார் அவர். உடனே கட்டடத்தின் முகப்பை நோக்கித் தீவிரமானார்.

நிமிடங்கள் நீண்டு சென்றன. வாசல் முகப்பில் நிழல் படிந்தது. நல்ல மடிசார் கட்டிய மாமியாக உருவம் தெரு விளக்கு வெளிச்சத்தில் காண முடிந்தது.

தலையில் நிறையப் பூ. கையில் ஒரு பூஜைக் கூடை... அதில் தேங்காய், பழம், பூ.

சிங் பைனாகுலரில் பார்த்துக் கொண்டே, – லிங்க்! செக்ஸ் காட்சி இன்னும் நடக்கிறதா? என்றார்.

– நடக்கிறது ஸார்!

சிங் மாமியின் முகத்தை பைனாகுலரில் இழுத்தார். முதலில் பிரமிப்பாக இருந்தது. அடுத்து ஜோதிகாவின் முகம் அதில் தன் அடையாளங்களோடு தெரிய ஆரம்பித்தது.

– லிங்க்! நிஜ ஜோதிகா கீழே போறாள். நான் பின்பற்றிப் போகிறேன். என்னை நீ பின்பற்று. எம்.28க்கு எச்சரிக்கை கொடு! என்றார் சிங்.

## 17

புடவைக் கொசுவம் காலில் இங்கும் அங்கும் சரி அடிக்க ஜோதிகா அசல் குடும்பப் பெண்ணாகத் தெருவில் போய்க் கொண்டிருந்தாள்.

சிங் தமது கண்ணாடியை அவசரமாக ஹாலில் எறிந்தார். தலையைக் கலைத்துவிட்டார். ஜிப்பாவைக் கழற்றினார். பீரோவிலிருந்து பெரிய துண்டை எடுத்தார். மேலே போர்த்திக் கொண்டார். வேட்டியை அவிழ்த்து மாற்றிக் கட்டிக் கொண்டார்.

மாடிப்படிகளில் அவசரமாக இறங்கி மாமி போன திசையில் போகத் தொடங்கினார். மாமி சாலையைக் கடந்தாள்.

அடுத்த தெருவில் நுழைந்து அதில் சிறிது நின்றாள். ஒரு குறிப்பிட்ட வாசலில் நின்றாள். ஜன்னல் வழியாக "மாமி நான்

கோவிலுக்குப் போறேன். வர்றீங்களா? என்று கேட்டாள்.

பதில் வெளியே கேட்கவில்லை.

— அப்போ நான்போயிட்டு வர்றேன்! என்று மாமி சொல்வது மட்டும் கேட்டது!

இடையில் நாகக்காச மாமி ஒரு முறை பின்புறம், விளாப்புறம் எல்லாம் பார்த்துக் கொண்டாள்.

சிங் சற்றே ஒரு வீட்டு மறைவில் ஒதுங்கினார். மாமி முன்னால் போக சிங், அந்த வீட்டு நம்பர் 63 என்பதைக் குறித்துக் கொண்டார்.

இன்னும் இரண்டு தெருக்களைத் தாண்டி அந்தப் பெரிய பிள்ளையார் கோவிலை அடைந்தார்கள். சற்று பழைய கோவில். கல்யாண மண்டபம் விஸ்தாரமாயிருந்தது. சுமாரான நடமாட்டம் உள்ளேயிருந்தது.

சன்னிதிக்குப் போய் வணங்கினாள். கற்பூர ஆரத்தி நடந்தது. தட்டில் பத்து ரூபாய் போட்டுவிட்டுப் பிரசாதம் பெற்றுக் கொண்டாள். சன்னிதியை விட்டு வெளியே வந்து பெரிய பிரகாரத்துள் நுழைந்தாள். ரொம்ப மெதுவாக பிராகாரம் சுற்றினாள்.

சிங்கை அது மிகவும் சோதித்தது. இரண்டாம் முறை சுற்றும் போது கோவிலுக்கு இன்னொரு மாமி வந்திருப்பதை சிங் கவனித்தார். மாமியா? மாமி போல வேடமா?

சிங் நவக்கிரகங்களின் பக்கத்திலிருந்து கவனித்தார். நல்ல ஆண்பிள்ளை மூஞ்சி. யாரோ ஆண், பெண் வேடம் போட்டிருக்கிறான். இந்த இரண்டாவது மாமி சன்னதியைத் தொழுது பிராகாரத்துள் நுழைந்தாள்.

சிங் தயாரானார். அதே நேரம் நொண்டி, நொண்டி பிச்சை கேட்டுப் போகும் ஒரு நபர் மீது அவரது கண் விழுந்தது.

லிங்கா? பிரமாதம்! அதற்குள் வேடத்தை மாற்றிக் கொண்டு வந்துவிட்டானே! சபாஷ்!

சிங்கைநோக்கி விசேஷப்பார்வையைப் போட்டுவிட்டு 'பே பே' ஊமைப் பிச்சைக்காரன் பிரகாரத்தில் நுழைந்தான்.

சிங் அவன் பின்னால் போனார். வெகு சீக்கிரத்தில் இரண்டாம் மாமி முதல் மாமியை அடைந்து விட்டாள். இருவரும் பேச ஆரம்பிக்க அப்பாவியாக லிங்க் நொண்டி நொண்டி அவர்கள் பின்னால் சென்றான். அவனைக் கண்டு அவர்கள் சற்று எச்சரிக்கையானது தெரிந்தது. ஆனால் 'பே பே' அவன் சொல்லிக் கொண்டு போக, முதலில் தோன்றிய சந்தேகம் மறைந்து விட்டது.

துர்க்கை சன்னிதி முன் அவர்கள் நின்றார்கள். நொண்டிப் பிச்சைக்காரன் தனது கைப்பையைக் கீழே வைத்து விட்டு பக்கத்து மடைப்பள்ளியை நோக்கி [illegible] போனான். லிங்கின் அபார வேஷத்தை சிங் ஆச்சரியத்துடன் ஆழ்ந்தினார். தூரத்திலிருந்தே எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

இரண்டு மாமிகள் துர்க்கை சன்னிதி முன் பேசிக் கொண்டு நின்றார்கள். வேறு யாரும் இல்லை. பிறகு ஒரு மாமி பூஜைக் கூடையை மற்றவருக்குக் கொடுப்பது தெரிந்தது. கூடைகளை ஒருவர்க்கொருவர் மாற்றிக் கொண்டார்கள்.

சிங் அதைக்குறித்துக் கொண்டார். பிறகு இரு மாமிகளும் நகர, லிங்க் மடைப்பள்ளி உள்ளிருந்து வெளியே வந்தான். நேராகப் போய் துர்க்கை சன்னிதி முன்னால் உள்ள பையை எடுத்தான். பிறகு அப்பிரதட்சிணமாகச் சுற்றி ஓடினான்.

சிங் எதிர்ப்பட்டார்.

— சார்! கைப்பையிலே டேப்ரிக்கார்டர் வச்சிருந்தேன். இரண்டு மாமிகள் பேசறதும் பதிவாகி இருக்கும். நீங்க போங்க. நான் மாமிகளைத் தொடர்ந்து போறேன்! என்று படபடத்து விட்டு மறைந்தான்.

சிங் பையை வாங்கி நகர்ந்தார்.

இரு பெண்களும் பிறகு அம்மன் சன்னிதியில் நுழைந்தார்கள். சுமாரான கூட்டம். வெள்ளியாகச் சுடர்கள். கற்பூரப் புகை. அர்ச்சனையின் 'நமஹ நமஹ' என்று எதிரொலி.

நொண்டி நின்றான். இரு பெண்களும் பிரிந்து நின்றார்கள். நொண்டி சன்னிதிக்குள் போகவில்லை. வெளியே இருந்து கவனித்தான். சிறிது ஆராய்ந்து விட்டு தூண் நிழலில் இருந்த சகாவை அழைத்தான்.

— மணி! அந்த ரெண்டு பெண்களைத் தெரியுதா? இப்போ உள்ளே போனாங்களே?

— எஸ் ஸார், அவுங்களைக் கவனிச்சுக்கோ! இன்னும் யார் அங்கே இருக்காங்க?

— பலிபீடம் பக்கத்தில் மூர்த்தி நிற்கிறாரு.

– அவரை உள்ளே அனுப்பறேன். நீங்கள் இந்த பெண்ணுகளை விடாமல் பின்பற்றணும். இரண்டு பேரும் பிரிஞ்சு போனா ஒவ்வொருத்தர் ஒவ்வொரு பெண்ணைப் பின்பற்றணும்.

– எஸ் ஸார்!

நொண்டி முந்திக் கொண்டு வெளியே வந்தான். தெருவைத் தாண்டி நிழல் பகுதிகளில் சிங் நின்றார். அருகில் அவரது ஜீப் வாவழைக்கப்பட்டிருந்தது.

– சார், உள்ளே ஏறுங்க! என்றான்.

இருவரும் ஜீப்பில் ஏறினார்கள். லிங் அழுக்குப் பைக்குள் கைகளைச் செலுத்தினான். ரிகார்டரை எடுத்தான். 'கடவுளே! பேச்சுப் பதிவாகியிருக்கணுமே?'' என்று ஆதங்கத்துடன் பட்டன்களை அழுத்தினான். சர்ரக் என்று சத்தம்! டேப் ஓடியது! வால்யூம்மை மெல்லியதாகக் கூட்டினான்.

– கவனிச்சியா மாணிக்கம்? என்று ஒரு பெண் குரல்.

– கவனிச்சேன்! யாரும் பின்பத்தலை! என்றது மற்ற குரல்.

லிங் நினைத்தான். அது ஆண்குரல் தான்.

மாணிக்கம் என்பது அவனாகத்தான் இருக்கும்.

– இருந்தாலும் எச்சரிக்கை வேணும் மாணிக்கம். இந்தப் பெண் குரல் ஜோதிகாவாக இருக்க வேண்டும்.

– நம்ப பின்னாடியே ஒருத்தன் வந்தானே அவன் வெறும் பண்டாரத்தனா ஜோதிகா?

– ஆமாம் நானும் சந்தேகப்பட்டேன். மடைப்பள்ளிக்குள்ளே போனப்புறம் தான்பண்டாரம்னு நிச்சயம் செஞ்சேன்.

– அப்போ யாரும் இல்லையே?

– இல்லை.

– நல்லவேளை. நல்லா ஏமாந்தாங்க. உனக்கு டூப் போடற மாலினி நல்லா நடிச்சுருக்கா!

– ஆமாம்! அசப்பில என்னைப் போலவேயிருக்கா! மேக்கப் நல்ல பொருத்தம்! நல்ல வேளையாக அவள் கிடைச்சதினால்தான் பிரச்சனை முக்கால்வாசி தீர்ந்துருச்சு!

– நல்லா வேலை காட்டுறா இல்லையா?

– ஆமாம், டெம்பிள்ல பெண் ஏரே செக்ஸ்தான்! போலீஸ் நல்லா ஏமாந்திருச்சு. டெலஸ்கோப்பை வெச்சு அவளையே



பார்த்துக்கிட்டிருக்காங்க! வேறு எங்கும் பார்க்கிறதில்லை! அதனால் தான் தப்பிக்க முடியுது. போலீசுக்குத் தவறான தடயம் கிடைக்கும்படி வச்சு அவுங்க உளவு பார்க்கிற திசையைத் திருப்பியாச்சு!

– பிரமாத காரியம் செஞ்சிருக்கே. இருந்தாலும் போலீஸ் அடிக்கடி வந்து தொந்தரவு கொடுப்பாங்களே?

– இங்கே கூட வீட்டைச் சுற்றிப் பாதுகாப்பு வச்சிருக்காங்க. நான் யோசித்து யுக்தி கண்டுபிடிச்சு டிமிக்கி கொடுத்து விட்டேன்!

– எல்லாம் நல்லாவே முடிஞ்சிருக்கு. வைரப்புதையலை வெச்சப் பின்னால போக்கிஷத்தை எடுத்துக்கிட்டோம். நீ பரோல் முடிஞ்சு சிறைக்குப் போறவரைக்கும் எதுவும் செய்யலை.

– படம் பத்திரம்!

– சரி.......

டேப் முடிந்தது. லிங் டக்கென்று ரிக்கார்டரை நிறுத்தினான்.

சிங் பேசினார்

– லிங் உடனே மாணிக்கத்தை மடக்கச் சொல்லு! அவன் பின்னாடி நம்ம ஆள் போயிட்டிருக்கு இல்லே?

– ஆமாம்.

– உடனே செய்தி அனுப்பி பிடிக்கச் சொல்லு.

– அடுத்த விநாடிகளில் வயர்லெஸ் செய்திகள் பறக்கத் தொடங்கின.

18

–சொல்லு! உண்மையைச் சொல்லு!

படாரென்று ஒரு பிரம்பு அடி மாணிக்கம் மீது விழுந்தது. தோல் சிலிர்த்தது. பளீரென்று அடி விழுந்த இடத்தில் ரத்தம் கட்டியது. மாணிக்கம் பல்லைக் கடித்தான். உள்ளே வலியின் அலை குறைந்தது. தலைக்குள் அதன் வெப்பம் அடித்தது. எத்தனை அடிகள்! எத்தனை குத்துக்கள்! எத்தனை மிதிகள்!

சொல்லு, சொல்லு வார்த்தைகள் திரும்பத் திரும்ப மோதின. அடி மிதி ஒவ்வொன்றினாலும் வலி ஏறிக் கடைசியில்

அதை உணரும் திறமை கூட அழிந்து கொண்டிருந்தது. இருப்பினும் ஒரு வார்த்தை அவன் வாயிலிருந்து வரவில்லை!

லிங் சிங்கிடம் வந்தான்.

– என்னாச்சு? என்றார் சிங்.

– எதுவும் சொல்ல மாட்டேன்கிறான்?

– வற்புறுத்தினாயா?

– உறுத்தினேன். பிரயோஜனமில்லை.

– இரும்பைக் காய்ச்சிக் கண் எதிரே காண்பிக்கலையா?

– ஆச்சு சார்! இன்னும் என்னென்னவோ செஞ்சாச்சு. சரியான கல்லுளி மங்கன்!

சட்டென்று சிங் நிமிர்ந்தார். அவருக்கு முன்னால் ஒரு கடிதம் பிரிக்கப்பட்டுக் கிடந்தது. ஜோதிகாவிடமிருந்து அவள் கூட்டாளி மாணிக்கத்திற்கு புறாக் கூண்டு மூலம் சென்றது. அதை அவனிடம் இருந்து பிடுங்கி இருந்தார்கள். சங்கேத மொழியாக இருக்கிறது கடிதம். வரை படம் அதில் இல்லை. நன்றாகத் தேடியாகி விட்டது. வரைபடத்தைக் காணோம்.

அந்த சங்கேத மொழிக் கடிதத்தை மீண்டும் படித்தார்.

ஜோநர்ழகேதடிலை திகலிக்மகசா!
அள்லதிகீருதுக கயாத்ன்ழ்த்க்ல்!
அகேக்ஷ ங்பொகிம்!

– 'ஜோநர்ழகே'ன்னு ஆரம்பிக்கிறது. பிரஞ்சு மொழியாகயிருக்குமோ? லிங் கேட்டான்.

– இல்லை. கொள்ளைக்காரர்களுக்கு எங்கே பிரெஞ்சு தெரியப் போவுது?

– தலைகீழாப் படிச்சாக் கூட சரியாக வாக்கியம் அமையவில்லை! என்றான் லிங்.

– லிங் ஏதோ ஒரு அமைப்பில எழுதியிருக்காங்க. அது என்ன என்று கண்டுபிடி. நமக்கு நேரம் அதிகமில்லை.

லிங் மூளையைக் குடைந்து கொண்டு உட்கார்ந்தான்.

– ஸார்! 'அகேக்ஷ ங்பொகிம்' அந்த வார்த்தையிலே 'அங்கே பொக்கிஷம்' என்கிற வார்த்தை மறைஞ்சிக்கிட்டு இருக்கு!

– இப்ப இதே அமைப்பிலே மற்ற வாக்கியங்களை வாசி!



லிங் வாசித்தான்.

'ஜோதி நகர் கிழக்கே மதகடிசாலை அதன் பாலத்தின் கீழ் குத்துக்கல் அங்கே பொக்கிஷம்!'

சிங் கையைத் தட்டினார்.

– சார், உடனே ஓடுவோம்! என்றான் லிங்.

– பொறு லிங்! இது ரொம்ப சுலபமான சங்கேத பாஷை. குற்றவாளிங்க இவ்வளவு சுலபமா ஒரு சங்கேத மொழியை உபயோகிக்க மாட்டாங்க.

– இதை சுலபம்னா சொல்றீங்க?

– ஆமாம். இதை ஒரு வேளை நாம்ப படிக்க வேணும்கிறதுக்காக எழுதி வச்சிருக்காங்க!

– அப்போ?

– கொண்டா நான் பார்க்கறேன்.

கடிதத்தைக் கையில் எடுத்தார். அடுத்த மேஜைக்குப் போனார். மேலே கண்ணாடிப் பரப்பு. அதன் அடியில் சக்தியான விளக்கு. சில போட்டோ நெகடிவ்களைப் பரிசோதிக்கவே அந்த வசதி.

அதில் கடிதத்தை வைத்தார். அடி விளக்கைத் தூண்டினார். மேஜையின் கண்ணாடிப் பரப்பில் அடர்த்தி வெளிச்சம். கடிதத்தை மேலும் கீழும் பார்த்தார். ஒரு பிரயோஜனமும் இல்லை! அவர் கண் கூசி ஒரு சொட்டு கண்ணீர் விழுந்தது.

சிங்கின் மன அடியாழத்தில் சூன்யம் நிலவியது.

தலையில் கையை ஊன்றினார். எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும். கடிதத்தில் வேறு செய்து இருக்க வேண்டும். உற்றுப் பார்த்தார்.

கடைசி வரியில் தண்ணீர் தெளித்த மாதிரி அடையாளம்! என்னதாகயிருக்கும்?

சட்டென்று நினைவு தட்டியது. அவர் கண்ணிலிருந்து விழுந்த ஒரு சொட்டு நீர், அது.

– லிங்க் வா! என்றார் சிங்.

அடுத்த அறையில் வாஷ் பேசின் முன் நின்றார். கடிதத்தைக் கழுவத் தொடங்கினார்.

ஆச்சரியம்! கழுவிய அந்த வார்த்தைகள் கரைந்து விட்டன. அந்த மைக்கு ஒட்டும் திறன் இல்லை.

சிங் உடனே காகிதத்தை எடுத்து சன்னல் வெளிச்சத்தில் பிடித்தார். ஒன்றும் தெரியவில்லை. யோசனை சுறுசுறுத்தது. – கொஞ்சம் பொறு! என்று சொல்லி ஈரமான கடிதத்தைக் கண்ணாடிப் பரப்பு மேஜை மீது விரித்தார்.

அடியில் வெளிச்சத்தைப் பார்த்திருக்க, கடிதக் காகிதத்தில் என்னவோ மாறுதல் நிகழ்வது போல் இருந்தது.

கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்க, போட்டோ பிரிண்டில் உற்பத்தியாவது போல் காகிதத்தின் உள்ளே வாட்டர் மார்க் முறையில் ஒரு வரைபடம் தோன்றியது. கூர்ந்து பார்த்ததும் மகாபலிபுரத்துக்கு தென் கிழக்கே உள்ள ஜீவாநகர்ப் பகுதியும் அதன் வட்டாரங்களும் தெரிந்தன. கடற்கரையோரத்தில் சம்பங்குடி கிராமமும் தெரிந்தது. அதன் தெற்கே அந்தக் காளிகோவில் குறிக்கப்பட்டிருந்தது. அதில் குளம் வரையப்பட்டிருந்தது. அதன் ஒரு பகுதியில் அம்பு போட்டுக் குறிக்கப்பட்டிருந்தது.

– லிங்க்! பொக்கிஷம் கிடைச்சாச்சு! என்றார் சிங்!

– எங்கே சார்?

– இந்த இடம்தான்! வரைபடத்தைக் காட்டினார். பார்த்தார்கள். ஆச்சரியம் தாளவில்லை! எப்படி இந்த வரைப்படம் வந்தது?

– மேலே எழுதியிருந்தது ஏமாற்றுவேலை! ஒருவேளை இந்தக் கடிதம் பறிபோயிருந்தால் போன இடத்தில் விவரம் தெரிந்து விடக் கூடாது என்பதற்காக அந்த ஏமாற்று!

– சரி சார். உள்ளே இந்த வாட்டர் மார்க் எப்படி வந்தது?

– அந்த வழி எனக்கு இப்போது ஞாபகம் வருது. அதைப் பற்றிப் படிச்சிருக்கேன். ரகசியமாகக் கடிதம் எழுதுவதற்குப் பல முறைகள் உண்டு. இது ஒருமுறை! கிளம்பு இந்த இடத்துக்குப் போறோம்!

பத்து நிமிடத்தில் பல போலீஸ் வேன்களில் நாற்பது போலீஸ் ஆட்கள் சிங் தலைமையில் சம்பங்குடிக்கு விரைந்து கொண்டிருந்தார்கள்.

குறிப்பிட்ட இடத்தில் தோண்ட ஏழு அடி ஆழத்தில்



வரிசையாகப் புதைக்கப்பட்ட உலோகப் பெட்டிகள் தெரிந்தன. உள்ளே கோவில் நகைகள்!

ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் நகைகளை எடுக்க, எடுக்க அதைப் பார்த்தவர்கள் உற்சாகத்துடன் கை தட்டினார்கள்.

அதே நேரம் இன்னொரு போலீஸ் பார்ட்டி 'ஜோ ஜோ ஜோதிகா'வைப் பிடித்து விலங்கிட்டிருந்தது.

(முற்றும்)


## கூப்பன்கள்

வாசகர் அரங்கம்
நாவல்போஸ்ட்
143, பீட்டர்ஸ் சாலை,
சென்னை – 600 086.

சிறுகதை
நாவல்போஸ்ட்
143, பீட்டர்ஸ் சாலை,
சென்னை – 600 086.

ஆதங்கம்
நாவல்போஸ்ட்
143, பீட்டர்ஸ் சாலை,
சென்னை – 600 086.

கவிதை
நாவல்போஸ்ட்
143, பீட்டர்ஸ் சாலை,
சென்னை – 600 086.


திரையில் அஜித்தை கரம் பிடிக்கப் போகும் ஷாலினி தனது கடைசி படமாக தமிழ் படம் ஒன்றில் காதல் இளவரசன், பிரசாந்துடன் ஜோடி சேருகிறார்.

